# ஜநவிநோதிநி.

இல. 11, 12. ] {நவம்பர்மீ டிசெம்பர்மீ} 1883. [புஸ்த. XIV.


## பொன்னிறக்கல் புறம்போக்குநிலம்.

இப்பூமண்டலத்தில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு அது காரணமாகப் புதிய உலகமென வழங்கப்படும் அமெரிக்கா கண்டத்தில் ஐக்கியமாகாணங்கள் என்று சொல்லப்பட்ட தேசத்தில் ஒயோமிங் என்று ஒருநாடுண்டு. அந்நாட்டின் வடமேற்கு மூலையில் 3,300 சதுரமைல் பரப்புள்ளதான பொன்னிறக்கல் புறம்போக்குச் சிங்காரவனம் எனப் பொருள்படும் 'யெல்லோஸ்டோன் நாஷனல் பார்க்கு' என்று ஒரு பிரிவு இருக்கின்றது. அவ்விடம் அநேகமாய் மலைநாடு. அந்நாட்டில் சிலா பருவதம் எனப் பொருள்படும் 'ராக்கி மௌன்டன்ஸ்' என்னும் மலைத்தொடர் ஊடுருவிச்சென்று சில நதிகளைக் கிழக்குமுகமாயும் சில நதிகளை மேற்குமுகமாயும் பிரிந்தோடச் செய்கின்றது. அந்தச் சிங்காரவனம் இப்பொழுது அமெரிக்காகண்டத்திலுள்ளவர்களுக்கெல்லாம் சவுக்கியத்திற்காகப் போய்த் தங்கியிருப்பதற்கு ஏற்றவிடமாகவும், ஏறக்குறைய இப்பூமண்டலத்திலுள்ளவர்கள் எல்லோரும் போய்ப் பார்த்துப் பேராநந்தமடையத்தக்க விசித்திரக் காட்சிகளுள்ளவிடமாகவும் இருக்கின்றதெனக் கண்டறியப்பட்டு அவ்வண்ணமே பலர் போக்குவரவுசெய்து வருகின்றவிடமாயிருக்கின்றதாயினும், 1870–ஆம் ஆண்டுக்கு முன் சில காட்டுமனிதர்களும் வேட்டையாடுகிறவர்கள் சிலரும் தவிர மற்றவர்களுக்கு அவ்விடம் இப்படிப்பட்டதென்றே தெரியாமலிருந்தது.

பொன்னிறக்கல் சிங்காரவனத்தைக் கண்டுபிடிக்கப் பலதடவை பலபேர் பாடுபட்டார்கள்; ஸாத்தியப்படாமற்போயிற்று. கடைசியில் ஐக்கியமாகாணத்து அதிகாரிகள் தகுந்த சேனைகளையனுப்பி அதைக் கண்டுபிடித்தார்கள். பிறகு அங்கோடுகிற ஆற்றின் தலைப்புறத்தைச் சார்ந்தவிடமெங்கும், இப்பூமண்டலத்தில்

பற்பல ஸ்தானங்களிலும் இயற்கையாயுள்ள தாதுவர்க்கம் மூல வர்க்கம் முதலிய பலவகைப் பொருள்களும், பலவகைப் புது மையான காட்சிகளும், மற்றும் பூமியைப்பற்றிய பல விசித்திரங் களும் சுபாவமாய்க் குடிகொண்டிருக்கின்றனவெனக் கண்டறிந்து அந்நாட்டதிகாரிகள் ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள்: அதாவது, அவ்விடத்தை ஒருவர் சுவாதீனம் செய்துகொள்ளவாவது, குடி யேறவாவது, ஒருவர்க்கு விற்பனைசெய்யவாவது, ஒன்றும் கூடாது; எல்லாப் பிரஜைகளும் தங்கள் தங்கள் சவுக்கியத்திற்காகவும் விநோதத்திற்காகவும் வந்து வசித்துப்போம்படி யாவர்க்கும் பொது வான ஒரு விஹாரவனமாய் இருக்கவேண்டுமென்பதாம். அந்தச் சிங்காரவனத்தை ஒருவருடைய வசத்தில் ஒப்புவித்திருக்கிறார்கள். அங்குள்ள விருக்ஷவகைகளையாவது தாதுவர்க்கங்களையாவது இன் னும் பலவிதமான அதிசயங்களையாவது யாரும் எவ்விதமாகவும் கெடுக்காதபடி காத்துக்கொள்ளவும், பின்னும் பலவகை அவசிய மான ஏற்பாடுகள் செய்யவும், அவ்விடத்து விநோதங்களைப் பார்க் கும்படி வருகின்றவர்கள் தங்கியிருப்பதற்கு அனுகூலமாய் யாரா வது அவ்விடத்தில் வீடுகட்டிக்கொள்வதாயிருந்தால் அப்படிப் பட்டவர்களுக்குப் பத்துவருஷத்துக்கு அதிகப்படாமல் குடிக்கூ லிக்கு இடம் விடவும், அவ்விதமான குடிக்கூலியாலும் அவ்விட த்து விளைவு முதலியவற்றாலும் வருகின்ற வருமானங்களை, அந்த வனத்தைப் பரிபாலிப்பது, வண்டிகள் போகத்தக்க பெரும்பாதை களும் குதிரைகள்மாத்திரம் செல்லத்தக்க கால்வழிகளும் செப்ப னிடுவது முதலிய ஜனங்களுக்கு உபயோகமான காரியங்களுக்கே உபயோகப்படுத்திக்கொள்ளவும், அங்குள்ள மீன்முதலிய நீர்வாழ் ஜந்துக்களை வேண்டுமென்று ஒருவரும் பிடிக்காமலும் காட்டிலுள்ள விலங்குகளையும் ஒருவரும் வேட்டையாடாமலும் காத்துக்கொள்ள வும் அவர்க்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

"இப்பூகண்டத்திலுள்ள பலவகைப் புதுமையான அதிசயங் களும் மிகவும் மேன்மையாக ஒன்றுகூடி அமைந்துள்ள ஒரு பிரதேசம் ஒயோமிங் தேசத்திலிருக்கின்றது. அவ்விடம் தன் காட்சியாலும் கனிஜவர்க்கங்களாலும் பூகோளவிசித்திரங்களாலும் அனைவரும் கண்டுகளிக்கத்தக்கதாயிருக்கின்றது. அவ்விடத்தி லிருந்து நதிகள் நாற்புறமும் பெருகியோடுகின்றன. அத்தேசத்து மகாநதிகளெல்லாம் உற்பத்தியாவது அவ்விடத்திலேதான். அங்கே பறவைகள் மிருகங்கள் ஊர்வன நீர்வாழ்வன முதலியவைகளும் பலவிதமாயிருக்கின்றன" என்று அவ்விடத்துக்குப் பிரயாணம் போய்வந்த ஒருவர் அந்தப் பிரதேசத்தின் பெருமைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்.

இவ்வாறு திருவனந்தபுரம் ராஜ்யத்தில் பாதியளவு விசாலமான ஒரு மாகாணத்தை எவர்க்கும் எவ்விதமான சுவாதீனமும் இல்லா

தபடி எல்லாப் பிரஜைகளுக்கும் பொதுவான புறம்போக்குச் சிங்காரவனமாக்கிக்கொண்டிருப்பது, அத்தேசத்தாருடைய சீர்திருத்தமும், முன்யோசனையும், குடிகளிடத்திலுள்ள அபிமானமும் இத்தன்மையனவென விளக்குகின்றது.

அந்தப் பிரதேசம் உன்னதமான ஒரு மலைப்பிராந்தத்திலுள்ளது. அவ்விடத்தின் உயரம் ஓரிடத்திலாயினும் கடல்மட்டத்திற்குமேல் 6,000 அடிக்குக் குறைந்திருக்கவில்லை. அங்கே பனிமூடிய மலைச்சிகரங்களும், காறுறுகளும், மலையோடைகளும், ஆகாயகங்கைகளும், தடாகங்களும் ஒன்றுகூடிக் காண்போர்க்கு அதிசயக்காட்சி அளிக்கின்றன. எரிமலைக்காட்சிகளும் அவ்விடத்திலுண்டு. அவற்றுள் பொன்னிறக்கல் தடாகமென்கிற ஒரு தடாகத்தின் காட்சியையே இச்சஞ்சிகைப்படத்தில் காட்டியிருக்கிறோம். ஆயின் ஒன்று கவனிக்கவேண்டும். எல்லாப் பிரஜைகளுக்கும் பொதுவான விஹாரவனம் அவ்விடத்தில் இது ஒன்றுமாத்திரமேயல்ல; பின்னும் சிலவிடங்களையும் ஐக்கியமாகாணத்தார் இவ்விதமாகவே ஸகலஜன ஸாதாரணமான விஹாரவனங்களாகச் செய்துகொண்டிருக்கின்றனர்.

## திரவியத்தைப்பற்றிய சில குறிப்புகள்.

ஒருவன் திரவியத்தைக் கையாள்வதில்—அதாவது திரவியத்தைத் தேடுவது, செலவழிப்பது, சேர்த்துவைப்பது ஆகிய இவ்விஷயங்களில்—நடந்துவருகின்றமாதிரியே அவனுடைய விவேகமும் உலக வியாபாரங்களில் அவனுக்குள்ள பழக்கமும் இத்தன்மையனவெனக் கண்டுகொள்வதற்கு ஒரு உத்தமமான அத்தாட்சியாகின்றது. இப்பூமியில் நாம் மனிதஜன்மமெடுத்துப் பெறவேண்டிய பெரும்பேறு திரவியமே என்று ஒருபோதும் எண்ணக்கூடாதாயினும், சரீரசவுக்கியத்திற்கும் ஊருடன் கூடிவாழும் வாழ்விற்கும் முக்காலேமூன்றுவீசம் திரவியமே சாதனமாயிருப்பதால் அற்பமென்று அறிவுடையோர் இகழத்தக்க பொருளன்று. யோசித்துப்பார்க்குமளவில் மன்னுயிர்க்கு மிகச்சிறந்த குணங்களான ஔதாரியம், சத்தியம், நீதி, தன்னயம்பாராட்டாமை முதலியவைகளும், சிக்கனம், முன்னாலோசனை முதலிய குடும்பதருமங்களும் திரவியத்தை ஏற்றபடி உபயோகிப்பதையே முக்கியமாகச் சார்ந்தவைகளாயிருக்கின்றன. இவ்வண்ணமே இக்குணங்களுக்கு நேர்விரோதமான லோபம், அசத்தியம், அநீதி, சுயநன்மையையேநாடுதல் ஆகிய இக்குணங்கள் பொருளாசை மிகுந்துள்ளவர்களிடத்திலும், சிக்கனமின்மை, வீணான தீச்செலவு, முன்

ஞாலோசனையின்மை ஆகிய இவை தமக்குக் கிடைத்தபொருளைத் தீயவழியில் உபயோகிக்க முயன்றவர்களிடத்திலும் குடிகொண்டிருக்கின்றன. ஆகையால், உலகநெறியை நன்றாய்க் கற்றுணர்ந்த ஒருவர் சொல்லியபடி, திரவியத்தைத் தேடுவதிலாயினும், செலவழிப்பதிலாயினும், சேர்ப்பதிலாயினும், கைபதிலாகக் கொடுத்து வாங்குவதிலாயினும், கடன்கொடுப்பதிலாயினும், கடன்வாங்குவதிலாயினும், தக்கபடி உசிதமானவழியில் பொய் புரளி சூது வாது முதலியவையின்றி யோக்கியமாக நடந்துவருபவனே ஸத்புருஷனாவான்.

இப்பூலோகத்தில் ஒவ்வொரு மனிதனும் தகும் வகையனைத்தாலும் ஏற்ற முயற்சிசெய்து சுகமே வாழ்ந்திருக்க வழிதேடுவது முறையாம். சுகவாழ்க்கைதான் சகல தருமங்களுக்கும் மூலாதாரமான சரீரத்தை நன்றாய்ப் பாதுகாக்கவல்லது. சரீரம் சுகித்திராவிட்டால், புத்தியைப் பண்படுத்தி அதனாலாகிய நற்பயன்கள் ஒன்றையும் பெறுவதற்கிடமில்லை; தம்மையும் தம் உற்றார் உறவினர்களையும் காப்பாற்றுவதற்கும் வழியில்லை. ஆகையால் நாம் எவ்வளவேனும் அலக்ஷியம்செய்யாமல் சுகவாழ்க்கையைத் தேடுவது முக்கியமான கடமையாம். நமது கடமையான இக்காரியத்தை நாம் எவ்வளவேனும் உபேக்ஷைசெய்யலாகாது. இக்கடமையை ஆதரவோடு நாம் கைக்கொண்டு இவ்வுலகத்தில் பெருமையுடன் உயர் பதவிபெற்று வாழ்வதற்குத் தகுந்த முயற்சிசெய்து வருவோமாயின், நம்மை அனைவரும் கவுரவப்படுத்துவார்கள். இக்கருத்துடன் உலகவியாபாரங்களில் தேர்ச்சிபெற முயலும் முயற்சிகூட நமக்கு ஒருவகைப் பயிற்சியேயொழிய வேறன்று. அம்முயற்சியால் ஒருவனுக்குத் தன்னைத்தான் பெருமைப்படுத்திக்கொள்ளும் குணமுண்டாகும்; மேலும் அது அவனுடைய வியவகார சக்திகளை வெளிப்படுத்தி, பொறுமை, விடாமுயற்சி முதலிய குணங்களைக் கையாளும்படி பழக்கிவைக்கும். நாளைப்பிழைக்க வகைதேடிக் கருத்தாயிருப்பவன் சிந்தனையுள்ளவனாயிராமல் தீராது. ஏனெனின் அவன் அன்றுகழி ஆண்டுகழியென்று இருப்பவனல்லனாதலால், பிற்காலத்துக்கு வேண்டியவைகளை முன்ஜாக்கிரதையுடன் தேடுவதற்கு வேண்டிய முயற்சிசெய்துவருவான். அன்றியும் அவன் எதிலும் மிதம்மிஞ்சாதிருந்து தன்னயம்பாராட்டாமையென்னும் நற்குணத்தை வழக்கப்படுத்தி வரக்கடவன். ஒருவனுடைய நல்லொழுக்கத்திற்கு வலிமையுண்டாக்குவது இதைப்பார்க்கிலும் வேறொன்றுமில்லை.

எவரிலும் மிஞ்ச மெய்வருந்தி உழைப்பவர்களே தாம் சம்பாதிக்கும் திரவியத்தின் அருமைபெருமையை அறிந்திருப்பார்களென்று உலகம் எண்ணுவது இயற்கையானாலும், அவ்வகுப்பார்

அநேகர் நாளடைவில் தங்கள் சம்பாத்தியத்தை எண்ணிக்கை யற்று அன்னபானுதிகளில் சிதைத்துப் பெரும்பாலும் திக்கற்றுத் தடுமாற, மிதச்செலவுசெய்து முட்டின்றியிருப்பவர்கள் அவர்களைத் தாங்கிவருகிறார்கள். நம்மில் வெகுபெயருக்குக் குடும்ப சுகத்திற்கும், பிறர் உதவி வேண்டாத ஸ்வாதீனத்திற்கும் போதுமான மட்டும் இடம் இருந்தும், முட்டுப்பாடான காலம் வரும்பொழுது தரித்திரத்திற்கும் அவர்களுக்கும் ஒரேயொருநாள் தூரமென்று பெரும்பாலும் தெரிகின்றது; அதுவே தேசத்தில் வறுமையும் வேதனையும் உண்டாக முக்கிய காரணமாம். அன்றாடம் பாடுபட்டுப் பிழைப்பவர்களிடத்தில் துரைத்தனத்தார் வாங்கும் வரியைக்குறித்துப் பிரபுவைக் கண்டுபேசும்படி அவர்களுடைய பிரதிநிதிகள் சிலர் போயிருக்கையில், அவ்வுதாரமதியுள்ள கோமகன் தன் உட்கருத்தை வெளியிடுவதற்கு அதுவே ஏற்றசமயமென்று கண்டு, "பாடுபட்டுப் பிழைக்கும் குடிகளிடத்தில் துரைத்தனத்தார் வாங்கும் வரி, வெறிதரும் மதுவகை ஒன்றில்மாத்திரம் அக்குடிகள் வீணாய் இறைக்கும் பணத்திற்கு எவ்வளவும் ஈடாகாது! இது நிசமென்று நம்புங்கள்" என மொழிந்தார். பெரிய தேசவிவகாரம் அனைத்திலும் இதுவே முக்கியமாய்க் கவனிக்கவேண்டுவதாம். அன்றாடம் கைப்பாடுபட்டுப் பிழைக்கும் பிரஜைகளுக்கு ஏற்ற நற்புத்தி இதை விட வேறு இல்லை. ஆனால் தற்சுகம் மறுத்தலும் தன்முயற்சியுமே சிறுகக்கூவிச் சபைகூடுமோ, கூடாது. அன்றியும் இக்காலத்துள்ள தேசாபிமானிகளுக்கு அவரவருடைய மிதச்செலவு முன்னுலோசனை எனும் சாமானிய விஷயங்களில் அத்தனை நோக்கம் இல்லை. ஆயினும், இவ்வகை நன்மைகளைச் சாதிப்பதனால் மாத்திரமே கைப்பாடுபட்டுப் பிழைக்கும் மனிதருக்கு சுத்த ஸ்வாதீனம் அமையும். வித்தியாவிநோதனாகிய ஸாம்யுயெல் ட்ரூ எனும் சக்கிலி "முன்ஜாக்கிரதை-மிதச்செலவு-காரியங்களை நன்கு நடப்பித்தல் எனும் இவைகளே கேடுகாலத்தைத் திருத்தவல்லவைகளாம்; எந்தவீட்டிலும் இவைகளுக்கு இருக்கச் சிற்றிடம் போதும்; ஆனால், குடும்பத்தின் சங்கடங்களைத் தீர்க்க இவைகளுக்கு உள்ள வல்லமை பார்லிமெந்தில் ஏற்பட்ட சீர்திருத்தச் சட்டம் எதற்கும் இல்லை" என்றும், மற்றொருவர் "உலகத்தை இயக்க விரும்புவோன் முதலில் தன்னைத்தான் இயக்கக்கடவன்" என்றும் மொழிந்தார்கள். "அவனவன் தன்னைத்தான் சீர்திருத்தப் பார்ப்பானானால், தேசமுழுதும் எத்தனை எளிதில் திருந்தும்" எனப் பூர்வ காலத்துச்செய்யுள் ஒன்றில் சொல்லியிருக்கிறது. ஆனாலும், நமது கெட்ட வழக்கங்களில் மிகச்சிறிதைத் திருத்துவதிலும் ஒரு கூட்டத்தாருடைய ஆட்சியையாயினும், அரசாட்சியையேயாயினும் திருத்துவதுமிக எளிதெனப் பெரும்பாலார்க்குச் சிந்தனை உண்டாகின்றது. இவ்வகை விஷயங்களில் முதல்முதல் நம்மை நாமே திருத்துவதற்

கல்ல, பிறனைத் திருத்தத்தொடங்குவது நம்மனதிற்கு மிகவும் இதமாகத் தோன்றுகின்றது.

மிதச்செலவு ஒன்று இல்லாவிடின் அன்றாடம் உழைத்து ஜீவிப்பவர் எப்போதும் கீழோராகவே இருப்பார்கள். ஜனசமூகத்தின் ஓரத்தில் தள்ளுண்டவர்களாகி, குறுவிலைக்காலத்தில் படாதபாடெல்லாம் பட்டு, காற்று, மழை, வெயில்களுக்கு ஒதுக்கிடமின்றி அவர்கள் துர்ப்பலரும் கதியற்றவர்களுமாயிருப்பார்கள். இதற்குத் தப்பவகை இல்லை. தன்மானம் இல்லாத அவர்களுக்குப் பிறர்மானமும் இராது. வியாபாரம் இளைத்திருக்கும் சமயத்தில் அவர்கள் ஆதரவற்று அவலப்படுவதன்றி வேறு கதி இல்லை. அன்றன்றுள்ள சம்பாத்தியத்தில் அற்பமாயினும் மிச்சம் பிடித்துவைப்பவர்களுக்குக் காரியங்களைக் கையாளும் திறமை உண்டாகும். அத்திறமை இல்லாதவர்களைக்குறித்து யாவருக்கும் பரிதாபம் உண்டாகும். சரியான சிந்தனையுள்ளவர்களாயிருப்பார்களானல், தம் மனைவி மக்கள் படும் அவஸ்தையை நினைக்கும்போதெல்லாம் அவர்களுக்கு அச்சமும் நடுக்கமும் உண்டாகாதிரா. "பூலோகத்து மனிதர், தேடின பொருளைச் சேமித்து வைத்தவர்கள் செலவழித்தவர்கள், அல்லது சிக்கனமுள்ளவர் பெருகச்செலவிடுவோர் என்று எப்பொழுதும் இருவகுப்பினராய்ப் பிரிக்கப்படுவார்கள். வீடு-யந்திரம்-வாராவதி-மரக்கலம் இவைகளை நிருமித்தவர்களும், மனிதருடைய நாகரிகத்திற்கும் சுகத்திற்கும் காரணமாகிய சகலமான பெருமுயற்சிகளையும் சாதித்தவர்களும் யாவர்?யாவரெனில், தேடிய திரவியத்தைக் காப்பாற்றிவைத்தவர்களும் சிறுகச் செலவுசெய்தவர்களுமே. கைப்பொருளை விழலுக்கு இறைத்தவர்கள் எப்பொழுதும் மேற்குறித்தவர்களுக்குத் தொழும்பாயிருந்தார்கள். இப்படி ஆவதுதான் தலைவிதியென்றும் தெய்வசங்கற்பமென்றும் சொல்லப்படும். எத்திறத்தோரானுலும் சரி, ஆபத்திற்கு உதவுமென்று பொருளைச் சேமித்துவைக்காமல் சிந்தனையற்றுச் சோம்பியிருப்பவர்கள் விர்த்தியடைவார்களென்று வாக்குறுதி சொல்வேனுனல் நான் சூதுசொல்லி ஊரை ஏமாற்றும் பொய்யனுவேன்" என ஒரு கனவான் கூலிவேலைசெய்த மனிதருக்குச் சொல்லினர்.

எவன் ஒருவனுனலும்சரி எத்தனைபெயரானுலும்சரி, அவர்கள் நிலை நன்னிலையானுல் அதைக் காப்பாற்றிக்கொள்ளவும், தீயநிலையானுல் அதைவிட்டு விலகவும் அச்சமற்ற மார்க்கம் ஒன்றே ஒன்று: அதாவது கைத்தொழில்முயற்சி, மிதச்செலவு, மதுவிலக்கு, சத்தியம் எனும் குணங்களை அனுசரித்துவருவதே. இக்குணங்களை அனுசரித்தவர்கள் வெகுபெயர் இடைவிடாமல் உயர்ந்து சீர்ப்பட்டுவருவதைக் காண்கிறீர்கள். மனிதர் மனதிற்காவது தேகத்திற்காவது அகிதமும் அதிர்ப்தியுமாயிருக்கின்ற நிலையினின்று உயரத்தக்க மார்க்கம் இந்தச் சாதனை ஒன்றுதவிர வேறு ராஜபாதை இல்லை

என அனுபவத்தில் தேர்ந்த உத்தமபுருஷர் ஒருவர் உரைத்திருக்கிறார்.

கூலிவேலைசெய்து பிழைக்கும் ஜனங்களுடைய நிலை தமக்கும் பிறர்க்கும் பயன்படத்தக்கதும், கவுரவமானதும், பிறர் மதிக்கத் தக்கதும், சுகவாழ்க்கைக்கு ஏற்றதுமாவதற்குத் தடைஎன்ன? ஒன்றும் இல்லை. கூலிக்கு வேலைசெய்வோர் அநேகர் அளவறிந்து செலவுசெய்து நற்குண நற்செய்கையுடையோராகி அறிவு முதிர்ந்து தேகம் தணிந்திருக்கிறார்கள். மனம் இருந்தால், அவர்களைப்போலச் சிலர்தவிரக் கைப்பாடுபட்டுப் பிழைப்போர் அனைவரும் அப்படி ஆகலாம். சிலர் பெற்ற பேற்றைக் கஷ்டமின்றி எல்லோரும் பெறலாம். அவர்கள் அனுசரித்த ஸாதனங்களை அனுசரித்தால் அவர்களுக்கு உண்டான சித்தி அனைவர்க்கும் உண்டாகும். எந்தெந்தத் தேசத்திலும் அன்றாடம் கஷ்டப்பட்டுப் பிழைக்கும் தரத்தார் இருக்கவேண்டுமென்பது தெய்வசங்கற்பமே. அது அனைவர்க்கும் நற்புத்தியும் நீதியுமாயிருக்கின்றது. ஆனால் இத்திறத்தோர் அளவுகடந்து செலவுசெய்து, மனக்குறை அடைந்து, அறிவுகுன்றிச் சுகம் அற்றிருக்கவேண்டுமென்பது கடவுளுடைய கருத்தன்று. அது அவர்கள் அறிவின்மையாலும், வீணாசைகளுக்கு இடங்கொடுப்பதனாலும், குறும்புத்தனத்தாலுமே உண்டாகின்றது. கைப்பாடுபடும் ஜனங்கள் தன்முயற்சிசெய்ய நோக்கங்கொள்வார்களாயின், அதுவே அவர்கள் விருத்தியடைவதற்கேற்றவழியாம். அது மற்றக் காரணங்களைப்பார்க்கிலும் அதிகமாய் அவர்களை உயர்ந்தபதத்தில் கொண்டுசேர்க்கும். இவ்வண்ணம் அது அவர்களை உயர்த்துவது உயர்ந்தவர்களைத் தாழ்த்துவதனாலல்ல, பக்தியிலும் புத்தியிலும் நற்செய்கையிலும் வர வர உயரும் பதவிமட்டத்திற்கு அவர்களைக் கிளப்பிவிடுவதனாலேதான். "நீதிநூல் முழுதும், சம்பிரமமாய் வாழும் சீமான்களைப்போல, சாமானியருக்கும் பொருந்தும். மானிடர் இயற்கையின் வடிவு முற்றும் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் அமைந்திருக்கிறது" என்று ஒருவர் சொல்லுகிறார்.

இவ்வுலகில் மனிதருக்கு உண்டாகும் முக்கியமான ஆபத்து மூன்று. அவையாவன, முயற்சியின்மை-பிணி-சாக்காடு இவைகளாம். இம்மூன்றையும் எதிர்க்க உதவும் எத்தனங்களை மனிதர் முன்னாடியே செய்துவைக்கவேண்டும். இது இனி நிகழ்வதை எதிர்நோக்காய்க் காணும் எவர்க்கும் தோன்றும். மேற்குறித்த ஆபத்துக்களில் முன்னவை இரண்டுக்கும் மனிதர் தப்பினும் தப்பலாம்; பின்குறித்த சாக்காடு எனும் ஆபத்துக்குத்தப்புவதுகூடாது. ஆயினும் புத்தியுடையோர் தாம் முயற்சிகுன்றியிருக்கவும் பிணியுற்று வருந்தவும் சம்பவித்தால், அப்போது தமக்கும் தம்மைப்பற்றியிருப்பவர்களுக்கும் உதவும்படி கூடியவரையில் மிதச்செலவுசெ

ய்து பொருள்சேகரித்து வைத்திருப்பது கடன். இந்த ரூபமாய்ப் பார்க்குமிடத்து, பொய் களவின்றி முறைமையாய்த் திரவியம்தேடி மிதமாய்ச் செலவிடுவது மிகவும் முக்கியமாம். முறைமையாய்த் தேடிய திரவியம் பொறுத்து முயன்ற முயற்சிக்கும், இளைக்காத மனவலிக்கும், எதிர்த்துநின்று துராசைகளை விலக்கியதற்கும், கோரின காரியம் கைகூடியதற்கும் அறிகுறியாம். நல்வழியில் திரவியத்தைச் செலவிட்டால் புத்தியும் முன்யோசனையும் கட்டுமட்டான நடையும் விளங்கும். இவைகளே மனிதர் நெறிகுறியைத் தளர்ச்சியின்றித் தாங்கும் அடியுரமாம். யாதொரு நிலைபேறுன விலைமதிப்பும் பயனும் இல்லாத திரளான வஸ்துக்கள் செல்வப்பொருள் என்னப்படினும், மற்றும் அநேகம் செல்வப்பொருள்கள் மிக அருமை பெருமையானவைகள்; உண்டி உடை குடும்பசுகம் இவைகளன்றி, தன்மானம்-ஸ்வாதீனம் என்பவைகளும் செல்வப்பொருள்களே. ஆகவே, திரவியம் சேமித்துவைத்திருக்கும் வேலைக்காரனுக்கு அது தரித்திரத்தின் வருவழியை அடைக்கும் அரணாயிருக்கின்றது; அது அவனை அடிகோலி நிற்கப்பண்ணி, நற்காலம் வருமளவும் நெஞ்சம் குளிர்ந்து ஆசைகூர்ந்து காத்திருக்க வல்லவனாக்கும். உலகத்தில் அசையாநிலைபெற எத்தனிக்கும் எத்தனம் என்றால் அது சாமானியமல்ல-அதில் ஒரு கௌரவம் இருக்கின்றது. அது ஒருவனுக்கு அதிகபலமும் குணநலமும் உண்டாக்கும். எவ்விதத்திலும் அது அவனுக்கு முன்னிலும் அதிகமான சுவாதீனம் அளித்து, மென்மேலும் உறுதியாக முயற்சிசெய்ய அவனை வல்லவனாக்கும்.

ஆனால் எப்பொழுதும் தரித்திரத்தின் அருகில் வட்டமிட்டு நிற்கும் மனிதனுடைய நிலைக்கும் அடிமையின் நிலைக்கும் சமீபமேதவிர அதிதூரம் அல்ல. எந்தரூபமாய்ப் பார்ப்பினும் அவன் தனக்குத்தானே யஜமான் அல்லன், அவன் எந்தநிமிஷத்திலும் பிறர்தொழும்பன் ஆகி அவர்கள் ஏவியபடி தொண்டுசெய்ய வந்தாலும் வரும்; இது அவன் கதி. ஒருவாறு எவர்க்கும் பணிந்து நடவாதிருக்க அவனால் மாளாது. ஊர் உலகத்தை அச்சமற்று எதிர்நின்று நிமிர்ந்து முகம்பார்க்க அவனுக்குத் துணிவு இல்லை; கஷ்டகாலத்தில் அவன் கதி பிச்சை, அல்லது ஏழைகளுக்கு இடும் சோறு. வேலை சிறிதும் அகப்படாவிடில், வேறுவிதமான வேலைத் துறைகளில் இறங்க அவனுக்கு நிர்வாகம் இராது; பாறையில் ஒட்டிய அட்டையைப்போல அவன் தன் ஊரில் கட்டுண்டிருப்பான், எழுந்து அயலூருக்கும் செல்லமாட்டான், பரதேசமும் போக்மாட்டான்.

சுவாதீனம் பெறுதற்கு மிதச்செலவுசெய்து பயில்வது ஒன்றே முக்கியமாம். மிதச்செலவுசெய்யும் திறத்திற்கு மேலான தைரியமும் வேண்டுவதில்லை, சிறந்துயர்ந்த நற்குணமும் வேண்டுவ

தில்லே; சாதாரணமான ஊக்கமும், நடுத்தரமான புத்தியுடையோர்க்குள்ள திறமையும் அதற்குப் போதும். மிதச்செலவு என்பது குடும்பத்தை நிர்வகிப்பதற்கு உதவும் ஒழுங்குபாடேதவிர வேறல்ல; அதன் கருத்தாவது காரியங்களை நன்குநடத்துவதும், முன்னுலோசனையும் வீண்செலவு தவிர்த்தலுமேயாம். 'மிகுந்த துணிக்கை ஒன்றுகூடக் கெட்டுப்போகாமற் சேர்த்துவையுங்கள்' என ஒருவர்மொழிந்த வாக்கியத்தில் மிதச்செலவு செய்யும் திறத்தின் சாரம் வெளியிட்டிருக்கின்றது. கடவுளுடைய நோக்கத்திலும் ஒருபொருளிடத்தில் அற்பமென்ற அலக்ஷியமும் கிடையாது; சிறப்புற்றதென்ற பெருமையும் கிடையாது; எல்லாம் ஒன்றுதான்.

அன்றியும் செலவுவரையறை என்பதற்கு, பின்பு நலம்பெறும் பொருட்டுத் தற்காலசுகத்திற்கு இடங்கொடாது நிற்கும் மனவலிமை எனவும் அர்த்தம் உண்டு. இந்த ரூபகமாகப் பார்க்குமிடத்தில் அவ்வலிமை மனம்போனபோக்கைத் தடுக்கவல்ல விவேகாதிக்கமாம். மிதச்செலவு என்பது வேறு, திரவியலோபம் என்பது வேறு: இதற்கு நியாயம்,—இல்லாதவர்க்கு ஏதும் கொடுத்து உதவ எப்பொழுதும் நிர்வாகம் உண்டாவது மிதச்செலவினுல். அது பணத்தைத் தெய்வமென்று பாராட்டாமல், நால்வருக்கும் பயன்படும் சாதனமென்று மதிக்கும். "நாம் பணத்தைச் சிந்தையில் அல்ல, சிரசில் வைத்துக்கொண்டு போகவேண்டும்" என டீன் ஸ்விப்து மொழிந்த வாக்கியம் இதற்குத் திர்ஷ்டாந்தம். மிதச்செலவு அல்லது குடித்தனப்பாங்கு என்பது முன்ஜாக்கிரதைக்குப் புத்ரி, இச்சையடக்கத்திற்குச் சகோதரி, ஸ்வாதீனத்திற்கு மாதா என்று சொல்லலாம். அது பாதுகாக்கும் தன்மையுள்ளது என்பது பிரத்தியக்ஷம்.—அது ஒருவனுடைய நற்குணநற்செய்கைகளையும், குடும்பசுகத்தையும், தேச சவுக்கியத்தையும் பாதுகாப்பது. சுருக்கிச்சொல்லில், அது தன்முயற்சியின் உத்தம ஸ்வரூபங்களில் ஒன்றும்.

லௌகிகத்தில் பிரவேசித்தபொழுது ப்ரான்ஸிஸ் ஹார்னர் என்பவருக்கு அவருடைய பிதா சொல்லிய புத்திமதியாவது:—"எவ்விதத்திலும் நீ சுகித்திருக்கவேண்டுமென் விரும்புகிறேன். ஆனுல் மிதச்செலவு செய்வது முக்கியமென்று நான் எவ்வளவு வற்புறுத்திச் சொல்லினும் ஏற்குமேதவிர ஏற்காமற் போகாது. செலவுவரையறை யாவர்க்கும் வேண்டியகுணம்; ஆழ்ந்த அறிவு இல்லாத மனிதர் அதை எவ்வளவு சிறக்கணித்தாலும், அது ஸ்வாதீனம் அடைவிப்பது நிசம். பெருமனதுள்ள பிரதிமனிதனுக்கும் முக்கியமான நோக்கம் ஸ்வாதீனமே" எனமொழிந்தார்.

ஒவ்வொரு மனிதனும் தன் வாவிற்கு ஏற்ற செலவு செய்து ஜீவனம்பண்ணும் உபாயம் அறியவேண்டும். இவ்வாறு ஜீவனம் செய்வதே அவனவன் யோக்கியதைக்கு முக்கியாதாரமாம். ஏனெனில்

ஒருவன் செலவு தன் நிலைமைக்கு மிஞ்சாமல் யோக்கியமாய் ஜீவனம் செய்யானாகில், அவன் அயோக்கியத்தனமாய்ப் பிறருடைய ஆதரவைக்கொண்டு பிழைக்கும்படி அவசியம் நேரிடும். தங்கள் விஷயத்தில் எவ்வளவும் எண்ணாமல் செலவுசெய்து, பிறர்சுகத்தை மறந்து தங்கள் போகத்தில்மாத்திரம் சிந்தனையாயிருப்பவர்களுக்குப் பணத்தின் அருமை பெருமை பெரும்பாலும் சமயம் தப்பிய பின்பே தெரியவரும். அந்த அழிப்பாளிகள் இயற்கையில் யோக்கியர்களாயிருப்பினும், அறுதியில் கிரியைகெட்டவர்களாய் அவதிப்படும்படி நேரிடும். காலத்தைப்போலப் பணத்தையும் அவர்கள் வீணிற் போக்கிவிடுவார்கள்; இனிமேல் சம்பாதித்துத் தீர்க்கலாமென்று கடன்படுவார்கள், திரவியம் தேடுமுன்னே தேட்டத்தைக் கணக்கிடுவார்கள்; இவ்வாறே கட்டுண்டவர்களாகிக் கடன் சுமைதலைக்குமேல் ஏறி அழுந்துவார்கள். அதனால் அவர்கள் சுவாதீனமும் தன்னிஷ்டமும் கெட்டுப்போம்.

மிதச்செலவு செய்வது ஆவசியகமாம்பொழுது, சிறுகச்சிறுகப் பொருள்சம்பாதிப்பதில் அல்ல, சிறுகப் பொருள்சேர்ப்பதில் கண்ணாயிருப்பது உத்தமம் என்பது பேக்கன் பிரபுவின் நீதிவாக்கியமாம். அநேகர் வீணாய்க் கெட்டவழிகளில் இறைக்கும் பணத்தைப் பத்திரமாய் மிகுத்திக் காப்பாற்றுவார்களானால், பெரும்பாலும் அது ஜீவன் உள்ளளவும் சுகமாய்ப் பிழைக்கத்தக்க பெருந்தனத்திற்கு அடி ஆகும். இப்படிப் பணத்தை வீணிற் சிதைவுசெய்வோர் பெரும்பாலார் உலகம் தமக்கு அநியாயம் செய்ததென்று உதாசினம் சொல்லியும், தமக்குத்தாமே மிகக் கொடிய சத்துருக்களாவார்கள். இப்படி ஒருவன் தனக்குத்தானே நண்பனாகாதிருந்தால் பிறர் தனக்கு நண்பராவாரென்று இருப்பதெப்படி? பொருள்வரவு மிதமாயிருந்தும் முறைமையாய் ஜீவனம்செய்வோர் கையில் பிறருக்குக் கொடுத்துதவ எப்பொழுதும் சிறிது பணம் இருக்கும்; உள்ள பொருள் அத்தனையும் சிந்தனையின்றிச் செலவழிக்கும் அழிப்பாளனோ எவருக்கும் உதவ ஒருபொழுதும் இடம்பெறான். ஆனாலும், உலோபியாயிருப்பது மிகவும் புத்தியீனம். தானும் அனுபவியாது பிறருக்கும் கொடாதிருக்கின்ற லோபகுணத்திற்குப் பெரும்பாலும் பார்வை குறுகிக் கருமச் சிதைவு உண்டாகும். ஒரு காசில் மனம் உள்ளவன் ஒரு பொழுதும் இரண்டு காசுக்கு உடையவனானதில்லையாம்.

கடைசியாய் ஒன்று சொல்லுகிறோம்: ஸத்தியந்தவறாமை, சிக்கனமுடைமை இக்குணங்களைப்போலவே ஈவிரக்கமும் உதாரபுத்தியுங்கூட இவ்வுலகவாழ்க்கைக்கேற்ற நன்னெறிகளாம். முக்கியமாய்த் திரவியத்தையே சார்ந்தவைகளான இக்குணங்களைத் தலைமேற்கொண்டு நடந்து உலகவியாபாரங்களில் மேன்மைபெற்றுவாழ்ந்ததற்குப் பல திருஷ்டாந்தங்கள் காணலாம்.

# அரபியும் அவன் குதிரையும்.

இலாமர்டயின் என்னும் பிரஞ்சு வித்துவானொருவர் அரபி தேசத்துக் குதிரையின் அன்பையும், அறிவையும்பற்றிய இன்பமான கதையை அடியில்வருமாறு எழுதிவைத்திருக்கிறார்.

அபுல்மார்ஷ் என்னும் அரபியொருவன் தன் ஜாதியாரோடு கூட, டமாஸ்நகரத்திலிருந்து பிரயாணஞ்செய்துகொண்டிருந்த அந்நகரத்து வர்த்தகக்கூட்டத்தாரை வழியில் எதிர்த்து, அவர்கள் கொண்டுபோன பண்டங்களைக் கொள்ளையாடி மூட்டைகளாகக் கட்டி அவற்றைத் தங்கள் ஒட்டகங்களின்மேல் ஏற்றிக்கொண்டிருந்தான். அந்த வர்த்தகர்களுக்குச் சகாயமாக ஏசர் நகரத்திலிருந்து பாச்சாவினால் அனுப்பப்பட்ட குதிரைவீரர்கள் ஸமயஸஞ்சீவியாய் அப்பொழுது அங்குவந்து சேர்ந்தார்கள். இதுசெய்தி அரபியர்களுக்குத் தெரிவதற்குள்ளேதானே அந்தக் குதிரைவீரர்கள் ஏகோபித்து அவர்களை ஆண்மையாய் எதிர்த்துப் பெரும்பான்மையோரைக் கொன்று, மிகுந்தவர்களைத் தங்கள் பாச்சாவினிடம் கொண்டுபோய்க் காட்டவேண்டுமென்று அவர்களையெல்லாம் கயிற்றாற் கட்டிக்கொண்டுபோனார்கள். அரபியருக்கும் துருக்கருக்கும் நடந்த அந்தச் சண்டையில் அபுல்மார்ஷின் தோளிலே குண்டுபாய்ந்தது; ஆனால், அந்தக் காயத்தினால் அவனுக்குப் பிராணபாயமுண்டாகாதென்று தோற்றினமையால், அவர்கள் அவனை ஓர் ஒட்டகத்தின் முதுகிற் சேர்த்துக்கட்டி அவனது குதிரையையும் தங்களோடுகூடவே கொண்டுபோனார்கள். அவர்கள் ஏசர் நகரத்துக்குப் போய்ச் சேருவதற்கு முதல்நாள் இரவில் அதற்குச் சமீபத்திலுள்ள ஜாபாத் என்னும் மலையில் தங்கள் சிறைகளோடு தங்கியிருந்தார்கள். குண்டு அடிபட்ட அரபியானவன் கையிலும் காலிலும் தோற்கயிற்றினால் கட்டுண்டு, துருக்கர் படுத்துறங்கிக்கொண்டிருந்த கூடாரத்தின் அருகே கிடந்தான். அவன் தனக்கு உண்டான புண்ணின் வேதனையினால் இராமுழுவதும் உறக்கமின்றி விழித்துக்கொண்டிருக்கையில், துருக்கர் தங்கள் கூடாரத்தைச் சுற்றிலும் தங்களுக்கு அரணாகக் கட்டியிருந்த குதிரைகளுள், தன்னுடைய கண்ணான குதிரையின் கனைப்பைக் கேட்டுத் திடன்கொண்டு, எந்தவிதத்திலாவது அதனோடு பேசவேண்டுமென்ற பேரவாவினால் அவன் பல்லைக் கடித்துக்கொண்டு, கட்டுண்டபடியே தரையோடு தரையாய் முழங்கையாலும், முழங்காலாலும் இழைந்தூர்ந்து தன் குதிரையிருக்குமிடஞ்சென்று அதைநோக்கி, பேதை நண்பனே! நீ துருக்கரிடம் அகப்பட்டுக்கொண்டு என்னபாடு படப்போகிறாயோ? உன்னை அவர்கள் நிலவறையிலே சிறைப்ப

படுத்திவைப்பார்களே; என்னுடைய மனைவியும், குழந்தைகளும் ஒட்டகப்பாலையும், தானியங்களையும் தங்கள்கையில் வைத்துக் கொண்டு உன்னை வருந்தி வருந்தி இனிமேல் எப்பொழுது ஊட்டுவார்கள்? நீ காற்றாய்ப் பறந்தோடுகிற பாலைவனத்தை இனிமேல் எப்பொழுது காணப்போகிறாயோ? வெள்ளைவெளேலென்று நுரைபோலுமுள்ள அடிவயிற்றை யோர்தான்நதியில் நீ இனிமேல் நனைப்பதேது? என்று நெஞ்சுருகிக் கண்ணீர்சொரியப் பேசினான். அவனுக்கு அந்த நிமிஷமே இருந்தாற்போலிருந்து ஓர் நினைப்புண்டாகி, மீண்டும் அக்குதிரையை நோக்கி, மித்திரா! நான் சிறைப்பட்டிருந்தாலுமிருக்கிறேன்; நீயேனும் தப்பித்துக்கொண்டு வீடுபோய்ச்சேர்; நீ நம்முடைய கூடாரத்துக்குட்சென்று, என்னுடைய மனைவிமக்களைக் கண்டு, அபுல்மார்ஷ் இனித் திரும்பிவாரானென்று சொல். அன்றியும், உன் தலையைக் கூடாரத்தின் திரைக்குள்ளே நுழைத்து அதனுட்சென்று அங்குவசிக்கின்ற என் சிறு குழந்தைகளின் கையை உனது நாவினால் இன்புற நக்கிக்கொடு என்றான்.

அவன் இவ்வாறு தன் குதிரையோடு பேசிக்கொண்டிருந்தபடியே அதைக் கட்டியிருந்த வெள்ளாட்டுமயிர்க் கயிற்றைத் தன் பற்களால் கடித்து அறுத்துவிட்டான். அறுத்தவுடனே அந்த அறிவுள்ள மிருகமானது தன் யஜமானன் காயப்பட்டிருக்கிறானென்றும், கட்டுண்டு கிடக்கிறானென்றுங் கண்டு துக்கித்து, அவன் தலையை முத்தமிட்டு, உடலை மோந்து, தோலால் செய்யப்பட்டிருந்த அவனுடைய அரைக்கச்சையைத் தன் பற்களால் பலமாய்க்கடித்து அவனைத் தூக்கிக்கொண்டு நாலுகாற்பாய்ச்சலில் ஒரே ஓட்டமாய் ஓடி, எவ்வகைப்பட்ட அபாயத்திற்குந் தப்பி அரபியின் கூடாரம்போய்ச் சேர்ந்து, அவன் தேகத்தை அவர்கள் முன்னே மெல்லென வைத்துத் தனக்கு அந்த யஜமானன் இட்ட கட்டளையை நிறைவேற்றியது. வெகுதூரம் பெரும்பாரஞ்சுமந்து வழிநடந்து வந்த வருத்தத்தாலும், பசிக்களையினாலும் அது அவர்கள் காலின்கீழேதானே தன் பிராணனையும் விட்டுவிட்டது. குதிரைகளுக்குள்ள அறிவும், யஜமானனிடத்திலுள்ள விசுவாஸமும் இத்தன்மையனவென்று சொல்வதற்கு இதைவிட வேறு திருஷ்டாந்தம் வேண்டுமோ!

இந்தக் குதிரையின் பெருமையையும் பராக்கிரமத்தையும் அரபியர்கள் இன்னும் மறவாதிருக்கிறார்கள். அன்றியும் இதன் பெருமையை அரபிதேசத்தவர்கள் எப்பொழுதும் பாடிப் புகழ்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.

# ருதுவர்ணனை—கிரீஷ்மருது

(தொடர்ச்சி.)

வேடப்பிள்ளைகளெல்லாரும் கூடிச் சந்திரகிரி மலையின்மேல் கட்டப்பட்ட கோட்டையைப் பார்க்கும்படி அவ்விடம் ஏறிச் சென்றார்களென முன் சஞ்சிகையிற் சொன்னோமே. அக்கோட்டையிலுள்ள கோபுரமண்டபபிராகாரங்களையும், விமானங்களையும், அவற்றில் சித்திரித்திருக்கின்ற சித்திரப்பதுமைகளையும், மற்றுமுள்ள பல விநோதங்களையுங்கண்டு பூர்வகாலத்துச் சிற்பசாதுரியங்களை வியந்து மனமகிழ்ந்துகொண்டு சிறிதுநேரம் அங்கே இளைப்பாற்றி இருந்தார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்டு மலையினின்றும் இறங்கிவரும்போது எதிரே மிகவும் உயரமான ஒரு சிகரத்திலிருந்து மிகுந்த இரைச்சலோடுகூட வெகு வேகமாய்ப் பெருகிவருகின்ற ஆற்றுவெள்ளத்தைக் கண்டு ரங்கசாமியும் அவன் உடன்பிறந்தவர்களும், அப்பா! இது என்னவேகம்! இதென்ன இரைச்சல்! பார்க்க வெகு ஆச்சரியமாயும் மிக்க பயங்கரமாயுமிருக்கின்றதே என்றார்கள். அதுகேட்டுக் கோபாலன் நகைத்து, இது ஒரு அதிசயமா? மழைக்காலங்களில் பெருமழைபொழிந்து எப்புறம் பார்த்தாலும் திட்டுத் திட்டாக நுரைத்துக்கொண்டு வெள்ளம் பெருகிவரும்போதல்லவோ பார்க்கவேண்டும்! அப்பொழுது இந்த ஆற்றுவெள்ளத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடுமா? குறைந்தபக்ஷம் காதவழிக்குக் காதவழி இதன் இரைச்சல் கேட்கும். நீங்கள் மலைப்பிரதேசத்திலேயே வாஸஞ்செய்பவர்களாயிருந்தாலும் மழைக்காலங்களில் மலையாறு பெருகிவருகின்ற விநோதத்தைக்கண்டு களியாதிருப்பது மிகவும் ஆச்சரியமே என்று அதைப்பற்றிய பின்னும் பல புதுமைகளையும் அவர்களுக்கு எடுத்து உரைத்தான். அத்தருணத்தில் தங்களோடுகூடவந்த நாய்களை நினைத்துக்கொண்டு அவைகளைக் காணாமல், அவைகள் என்ன ஆயினவோவென்று விசாரிக்கலானான். இதற்குள் அந்த நாய்கள் வழியிலுள்ள பூச்சி புழுமுதலியவைகளைப் பிடிக்கும்படி போக அங்கே, தென்படுகிற காட்டுப்பூனை முசல்முதலியவைகளைத் துரத்திக்கொண்டு போவதும் வருவதுமாயிருக்கையில், வழிதப்பி இவர்கள் தெப்பலாடின தடாகத்துக்கு எதிர்ப்புறத்திலுள்ள பாறைபோய்ச்சேர்ந்து அங்கே இவர்களைக் காணாமல் அல்லாடிக்கொண்டிருந்தன. அப்பொழுது அப்பிள்ளைகளிருந்தவிடம் இதற்குக் கிட்டியவிடமல்லவாயினும் உன்னதமான விடமானது பற்றி அத்தடாகக்கரையிலிருந்த நாய்கள் அவர்களுடைய கண்ணுக்குத் தோன்றின. அதுகண்டு ராமசாமி நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள்; நான் போய் ஒரு நொடிப்பொழுதில் அங்

நாய்களைப் பிடித்துக்கொண்டு வருகிறேன் என்று சொல்லி வெகு
வேகமாய் ஓடிப்போய், சில கொடிகளைப்பிடுங்கி அவைகளைப்
பிணைத்துக்கட்டி இழுத்துக்கொண்டு வந்தான். இதற்குள் பொழுது
போகிற தருணமாகிவிட்டது; அது தெரிந்து அவர்கள் இனி
ஆலசியம் செய்யலாகாது என்று அங்கிருந்து வெகு வேகமாய்ப்
புறப்பட்டு வந்தார்கள்.

வரும்போது வழியில் ஒரு எறும்பு சாரியைகண்டு அவற்றின்
செய்கைகளை நுட்பமாய் உற்றுப்பார்க்க வேண்டுமென்றெண்ணி
அங்கேயே நின்றார்கள். அவற்றுள் சில எறும்புகள் முட்டை
களை எடுத்துக்கொண்டுபோயின; பின்னும் சில எறும்புகள்
இரைக்கு உபயோகமான புழு பூச்சிமுதலியவற்றை எடுத்துக்
கொண்டுபோயின; மற்றுஞ் சில இங்குமங்குமோடிச் செத்துப்போ
ன எறும்புகளைப் பள்ளங்கல்லிப் புதைத்துக்கொண்டிருந்தன. பெரிய
கட்டையெறும்புகள் சில சாரிக்கு எதிராய்த் திரும்பிவந்து, பின் தங்
கிப்போய் மெல்லமெல்ல நகர்ந்து வருகின்றவைகளை உற்சாகப்படுத்
திக்கொண்டிருந்தன. பார்வைக்கு மிகவும் அற்பப்பிராணியாகத்
தோன்றுகின்ற எறும்புகள் செய்யும் இத்தன்மையான விவேகமுள்ள
செய்கைகளையெல்லாம் கண்டு மிகவும் அதிசயப்பட்டுத் தம்மி
டத்திலிருந்த சில தின்பண்டங்களை நறுக்கிப் பொடியாக்கி அவ்வெ
றும்புசாரியிலிறைத்துவிட்டு மறுபுறத்தில் திரும்பிப் பார்த்தார்கள்.
அங்கே சில எறும்பு மிகப் பெரிதான புழு ஒன்றைப் பிடித்து அப்
படியே குழிக்குள் இழுத்துக்கொண்டுபோகக்கூடாமல், அதிகூர்மை
யான தமது தும்பிகளால் அதைக் கண்டங்கண்டமாகக் கத்தரித்து
ஒவ்வொரு கண்டத்தை இவ்விரண்டு எறும்புகளாக இழுத்துப்
போய்க்கொண்டிருந்தன. அதைப்பார்த்து, இந்த அற்பஜந்துக்
களுக்கு இத்தன்மையான ஸாமர்த்தியத்தை அளித்திருக்கின்ற
கடவுளுடைய மகிமையே மகிமையென்று இப்படி வியந்துகொண்
டிருந்தார்கள். அது கண்டு கோபாலன், பொழுதுபோயிற்று; வீடு
இன்னும் வெகுதூரம் இருக்கின்றது; இனித் தாமதப்படலாகாது;
விரைவாக நடந்துவாருங்கள் என்று சொல்லித் துரிதப்படுத்த, சீக்
கிரமாய் நடந்துபோகலானார்கள்.

அதற்குள் மாலைப்பொழுதாகி மஞ்சள் வெயில் பரவினத
னாலும், அவ்வெயிலினால் சிவந்து தோன்றிய செவ்வானம் பிரதி
பலித்ததனாலும் வழிக்கு இப்புறமும் அப்புறமுமுள்ள நீர்த்தாக்கு
களில் தண்ணீர் பல விசித்திரவர்ணமுள்ளதாகத் தோன்றினதையும்,
தங்கள் நிழலும், மிருகங்கள் மரங்கள் மலைகள் முதலியவற்றின் நிழ
லும் நெடுந்தூரம்நீண்டு வெகுவிநோதமாய்த் தோன்றுவதையும்காண
மனதிற்குண்டான ஆநந்தத்தினால், எறும்புசாரியைப் பார்த்துக்கொ
ண்டிருக்க அநுகூலப்படாமற் போயிற்றேயென்ற விசாரத்தைவிட்
டுச் சீக்கிரமாய் நடந்துபோக மிக்க உற்சாகமுடையவர்களானார்கள்.

இப்படி நடந்து நன்றாகப் பொழுதுபோவதற்குள்ளே மலைவிட்டிறங்கி அடிவாரத்திலுள்ள பெரிய பாதைவந்து சேர்ந்தனர்கள். அவ்விடத்தில் கோபாலன் பிள்ளைகளுக்கெல்லாம் ஏறிக்கொண்டுபோக ஏற்றதான வண்டியொன்று திட்டஞ்செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டு மிக்க ஜாக்கிரதையுடனே பொழுதுபோன நான்கு நாழிகைக்குள்ளே வீடுபோய்ச் சேர்ந்தான். பிறகு எல்லாரும் சுகமாய்ப் போஜனம் செய்து வெகுதூரந்திரிந்த இளைப்பினால் போய்ப் படுத்துக்கொண்டு உடனே மெய்ம்மறந்து தூங்கிப்போனார்கள்.

மறுநாள் மரகதம் பிறந்தநாள். ஆதலின் காலையில் எழுந்தவுடனே அச்சிறுமியையும் மற்றப் பிள்ளைகளையும் சிற்றம்மையானவள் எண்ணெய்தேய்த்து நீராடுவித்து வீடுவாயில் முதலிய விடமெல்லாம் நன்றாய் அலங்கரித்து, அன்றையதினம் வெகு சிறப்பாக விருந்துசெய்வித்தாள். அவ்வீட்டிலுள்ளோர் அனைவரும் எண்ணெய்தேய்த்து நீராடி அவரவர்க்கு ஏற்றபடி அலங்காரம் செய்துகொண்டு தமது பந்துமித்திரர்களோடுகூட விநோதமாய்ப் போஜனம் செய்துவிட்டுப் பிறகு பாட்டும் கூத்தும் களிப்பும் விளையாட்டுமாய் அன்றையதினத்தை வெகு விநோதமாகப் போக்கினார்கள்.

அன்று கழிந்த மறுநாள் காலையில் தூங்கியெழுந்து மரகதம் இன்று ஒருநாள்தானே நான் இங்கிருக்கப்போகிறேன்; நாளை ஊருக்குப் போகவேண்டுமே; மறுபடியும் வந்து நான் உங்களைப்பார்ப்பது என்றைக்கோ? என்றுசொல்லி, தன்னுடைய நாயையும் மற்றுமுள்ள தன் தோழிமார்களையும் பார்த்து விசாரமுற்றுச் சிறிது நேரம் அவர்களுடன்கூடிக் களிப்படைந்திருந்தாள். ரங்கசாமியும் தன் அண்ணன் தம்பிகளை விட்டுப்பிரிந்து குதிரை சவாரிசெய்வது முதலான வேடிக்கைகளையும் இழந்துபோகவேண்டி வந்ததேயென்று சிந்திக்கலானான். மோகனமும் தன் சிற்றம்மையோடும் அண்ணன் தம்பிகளோடும், இனி ஒரு வருஷகாலம் நாம் எல்லோரும் க்ஷேமமாயிருக்கும்பக்ஷத்தில் மேல்வருஷம் நான் மறுபடி இவ்விடத்திற்கு வருகிறேன். அப்பொழுது வந்து மலையேறித் திருவேங்கடமுடையானை ஸேவிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கிறேன் என்றாள். இப்படித் தங்கள் தங்கள் நிலைமைக்குத்தக்கபடி எல்லோரும் பேசிக்களித்துக்கொண்டிருந்து, அஸ்தமிக்க யாமப்பொழுதுக்கேபிரயாணத்துக்கு வேண்டிய ஸன்னாகங்கள் செய்துகொண்டார்கள். மறுநாள் விடியயாமத்திற்குப் புறப்பட்டு, கோபாலன் முதலியவர்களும் வழிகொண்டு விடும்படி பின்தொடர்ந்து வர, இருப்புப்பாதை வண்டி தங்குமிடத்திற்குச் சென்று, வண்டி வருமளவும் அங்குள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வண்டி வந்தவுடனே தங்களைக்கொண்டுவிட வந்தவர்களோடு, போய்வருகிறோம், மறுபடியும் சீக்கிரமே உங்களைப்பார்க்க இவ்விடத்திற்கு வருவோம் என்று

சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு வண்டியேறிக்கொண்டார்கள். உடனே வண்டி புறப்பட்டது. புறப்பட்டவுடனே தங்கள் ஊரையும் அங்குள்ள விநோதங்களையும் தாய்தகப்பன்மார்களையும் தங்களுக்கு மிகவும் அருமையான நாயையும் நினைத்துக்கொண்டு, முன் திருப்பதியிலுள்ளவர்களை விட்டுப் பிரிந்துபோகிறோமென்பதைப் பற்றியிருந்த விசாரமெல்லாம் நீங்கி இரண்டு யாமப்பொழுதுக்குள்ளேயே இறங்கவேண்டிய ஸ்தானம்போய்ச்சேர்ந்து புகைவண்டியினின்றும் இறங்கினார்கள். இப்பிள்ளைகள் வருகிற சமாசாரம் முன்னமேதெரிந்து அங்கிருந்து இவர்களை அழைத்துக்கொண்டுபோவதற்காக அவ்விடம் வந்திருந்த வேலைக்காரர்களும் இவர்களுடைய நாயும் இவர்கள் வந்திருப்பதைப்பார்த்து மிக்க மகிழ்ச்சிகொண்டார்கள். அப்போது நாய் இவர்களைப்பார்த்து கீச்சுகீச்சு என்று கூவி வாலையாட்டிக்கொண்டு எழும்பியெழும்பித் தாவியோடிவந்து அவர்களண்டைசேர்ந்து அவர்களுக்குத்தன்மூஞ்சியைக்காட்டிற்று. அப்பிள்ளைகளும் இவ்வளவு விசுவாஸமுள்ள நாயை விட்டுப் பிரிந்து நாம் இத்தனைநாள் சிறிதும் விசாரமின்றிச் சந்தோஷமாய்த் திரிந்துகொண்டிருந்தோமே; நம்மைப்போல நெஞ்சுறுதியுடையவர்கள் மற்றெவருமில்லையென்று சொல்லிப் பரிதாபப்பட்டார்கள்.

அதன்பிறகு அவர்களெல்லாரும் அங்கிருந்து புறப்பட்டு மறுநாள் சாயங்காலம் தம் ஊர்போய்ச்சேர்ந்து தமது வரவையெதிர்பார்த்திருந்த தாய்தந்தையர்களைச் சந்தோஷப்படுத்தினார்கள். அப்பொழுது அவர்களுடைய தாய் ஒருமாதகாலமாய் மக்களைவிட்டுப்பிரிந்திருந்தவளாதலால், அப்பிள்ளைகளைப் பார்த்தவுடனே எதிர்கொண்டுவந்து கட்டியணைத்து முத்தமிட்டுமிகவும் மகிழ்ச்சிகொண்டாள். பிறகு கடைசிமகளைமாத்திரம் இடுப்பில் எடுத்துக்கொண்டு எல்லாப்பிள்ளைகளையும் வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோய் இளைப்பாற்றி எல்லாருக்கும் ஸ்நாநம்செய்வித்து அதற்கு முன்னமே சித்தமாயிருந்த போஜனத்தை அவர்களுக்கு அளித்துச் சுகமாய்ப் படுத்துத் தூங்கப்பண்ணினாள்.

மற்றநாள்காலையில் மரகதமும் ரங்கசாமியும் எழுந்து பல் தேய்த்துக்கொண்டே தங்கள் அருமை நாயைக் கூடக்கூட்டிக்கொண்டு தோட்டத்திற்குள் புகுந்து அங்கே மரஞ்செடிகளெல்லாம் இருக்கின்ற விதங்களைக்கண்டு, இவையெல்லாம் முன் நாம் பார்த்தபோது இருந்தபடியல்லாமல் வேறுவிதமாய் இருக்கின்றன. ஆயினும், நன்றாக முற்றிப் பழுக்கும்தருணமான காய்கள் குலைகுலையாய்த் தொங்குகின்ற மாமரங்களையும் முந்திரிச்செடிகளையும், நன்றாய்ப் பழுத்துக் குமுகுமுவென்று வாசனைவீசுகிற பழங்கள் அடர்ந்த பலாமரத்தோப்புகளையும் பின்னும் பலவிதமான பூஞ்செடி பழச்செடிகளையும் பார்க்கப்பார்க்க பேரானந்தமாயிருக்கின்றது என்று சொல்லிப் பசியெடுத்ததுகூடத் தெரியாமல் தோட்ட

மெல்லாம் சுற்றித் திரிந்துகொண்டிருந்தார்கள். அதற்குள் தாதி அப்பிள்ளைகளைக் காணுமல் தேடிக்கொண்டுபோய், ஒரு முந்திரிச் செடியில் கனிந்தபழமொன்றைப் பறித்துக்கொண்டிருந்த பிள்ளைகளைப் பார்த்து, சிற்றம்மை ஊரில் இத்தனைநாள் இருந்துவந்ததற்குப் பயன் இதுதானே? சாப்பாடுகூட வேண்டாமா? எந்நேரமாயிற்று? போதும்போதும் வாருங்கள்; சாப்பிட்டுவிட்டு விளையாடலாம் என்றுசொல்லி அழைத்துக்கொண்டுபோனுள்.

பிறகு கிரமமாய்ப் போஜனம்செய்துவிட்டு மூன்றுபிள்ளைகளும் அக்கம்பக்கங்களிலுள்ள சிநேகிதர்களைப் பார்க்கப்போய், பார்த்தவர்களுக்கெல்லாம் தாம் ஊருக்குப் போய்வந்த ஸமாசாரங்களையும், அங்கே தாங்கள் பார்த்த அதிசயங்களையும், செய்த காரியங்களையும், அனுபவித்த சவுக்கியங்களையும் சொல்லிச் சொல்லி அவர்களைச் சந்தோஷிப்பித்தார்கள். மறுபடியும் வீட்டுக்குத் திரும்பி வரும்போது வழியில் ஒரு மரத்தடியிலே மேய்ந்துகொண்டிருந்த ஆட்டுமந்தையைக் கண்டார்கள். அவ்வாடுகள் மேலேயிருந்த மயிர்களெல்லாம் கத்தரிக்கப்பட்டு மிகவும் இளைத்துப்போனவைகள்போல் ஒருமாதிரியாகத் தோன்றின. அதுகண்டு மரகதம், இவ்வாடுகளெல்லாம் முன்னிருந்தமாதிரி தப்பியிருக்கின்றன; முன்னே நாம் பார்த்த குட்டியொன்றுவது இதில் காணப்படவில்லை; எல்லாம் பெரிய ஆடுகள்போல் இருக்கின்றன. அதிருக்கட்டும், இவை மிகவும் திண்டிப்போத்துகள். நாய்களைப்போல நம்முடன்கூடி விளையாடுகின்றவைகளல்ல; நம்மைப் பார்க்கும்போதே பயப்பட்டு ஓடுகின்றன. இப்படிப்பட்ட மட்டி ஜந்துக்களைப் பார்த்துப் பயனென்ன? என்று அவைகளை நிந்திக்க ஆரம்பிக்கும்போது ரங்கசாமி, ஆமாம், நீ சொல்வதெல்லாம் சரிதான். முன் குட்டியாயிருந்தவைகளெல்லாம் நன்றுய் ஆகாரம் தின்று பருத்துத் தாய்க்குச் சரியாய்ப்போயிருக்கின்றன; ஆதலால், இம்மந்தையில் ஆட்டுக்குட்டியே காணப்படவில்லை என்றிப்படி மற்றக் கேள்விகளுக்கும் தகுந்த சமாதானம் சொல்லிக்கொண்டே அங்கே நில்லாமல் அப்புறம் போகலானுர்கள். அந்தக் காட்டிலே முன் இருந்த பூக்கள் தளிர்கள் முதலியவெல்லாம் மாறிப்போனபோதிலும், கொஞ்சி, களா முதலிய புதர்களில் நிரம்பப் பழுத்திருந்த பழங்களைப்பார்க்க அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. அப்பழங்களை வேண்டியமட்டும் பறித்து வயிறுநிரம்பத் தின்றுகொண்டு மெல்ல வீடுபோய்ச் சேர்ந்து சுகமாயிருந்தார்கள். இப்படித் தங்கள் இஷ்டப்பிரகாரம் விளையாடிக்கொண்டு அவர்கள் பொழுது போக்கிக்கொண்டிருக்கையில், கோடைமழை பொழிந்து வெயிலில் தீய்ந்து உலர்ந்துபோன புற்றரைகளையும் செடிகொடிகளையும் பசுமையாகச் செய்து, ஆடுமாடுகளுக்கு உல்லாசமும் குடித்தனக்காரர்களுக்கு ஏர் உழுவதற்கு அனுகூலமும் உண்டாக்கிற்று.

ஒவ்வொரு பருவத்திலும் இப்படி ஒவ்வொரு காரணத்தைப் பற்றி எல்லாப் பிராணிகளுக்கும் சந்தோஷமுண்டாவது இயற்கையாயிருக்கின்றது. இந்தப் பருவங்கள் ஒன்று மாறி ஒன்று வருவதும் போவதுமாயிருப்பதுபோலவே மனிதர்களுக்குச் சுகதுக்கங்களும் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கின்றன. விவேகமுள்ளவர்கள் சுகம் வந்ததென்று ஒரு சந்தோஷமும், துக்கம் வந்ததென்று ஒரு விசனமும் ஒருபோதும் கொள்ளமாட்டார்கள்.

இன்று நேரிடுகின்ற ஒரு குறையை நாளைக்குத் தீர்த்துக்கொள்ளலாமென்றிராமல், அப்பப்போது நேரிடுகின்ற குறைவுகளை உடனுக்குடனே சீர்ப்படுத்திக்கொண்டும், ஒரு கதை முடிந்த உடனே மற்றொருகதை ஆரம்பிக்கக் கூடாத பக்ஷத்தில் படித்த கதையையே படித்து அதிலுள்ள நுட்பங்களையெல்லாம் புதிதுபுதிதாய் அறிந்து சந்தோஷிப்பதுபோல், ஒரு வேலை முடிந்தவுடனே மற்றொரு வேலை ஆரம்பிப்பது சரிப்படாமற்போனாலும், செய்த வேலையையே சீர்ப்படுத்திக்கொண்டு அதின் மேன்மைகளைக் கண்டு மகிழ்ந்துக்கொண்டும் சுகமாய்க் காலம்கழிக்க முயலவேண்டும். இது அனைவர்க்கும் உரிமையான செய்கையாம். இவ்வாறு செய்து வருவார்களாயின் அப்படிப்பட்டவர்களுக்கு ஒருபோதும் எவ்விதமான குறைவும் நேரிடாது. ஒருவேளை ஏதாவது தவறு நேரிட்டாலும் அது கண்டு மனஞ்சோராமல் தைரியமாய்க் காரியத்தில் கண்ணாயிருந்தால் அவர்கள் என்றும் சுகமடைவார்கள்.

## கல்கத்தாவில் ஏற்படுத்திய விநோதக் காட்சிசாலை.

நாளது டிசம்பர்மீ 4உ கல்கத்தா நகரத்தில் அற்புதமான விநோதப் பொருட்காட்சிசாலையொன்று அமைக்கப்பட்டது. அந்த அற்புதத்தைக் கண்டு களிக்கும்படி இவ்வுலகமெங்குமுள்ளவர்கள் கூட்டங்கூட்டமாய் அவ்விடத்துக்குச் சென்றூர்கள்; இன்னும் போய்க்கொண்டும் இருக்கிறூர்கள். கன்னாட் டியூக் என்னும் ராஜகுமாரரும் தமது தேவியாருடன் அத்தருணத்தில் அவ்விடம் வந்திருந்தார். இப்பூமியின் பற்பல நாடுகளிலுமுள்ள ஜனங்களின் வாழ்க்கை, நாகரிகம், சுகம், பெருமை, பொருள், நயம், சௌக்கியம், விவேகம் முதலிய எல்லாவிஷயங்களுக்கும் ஏற்ற பலவகைப் பொருள்கள் அங்கே கொண்டுவரப்பட்டு ஓர் விசாலமான தோட்டத்தில் பல விடுதிகளை நிர்மாணஞ்செய்து அவற்றுள் வெகு அழகாக வரிசைவரிசையாய்ச் சிங்காரித்துவைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் இந்தியாவின் பண்டங்களே மிகுதியாம். ஆஸ்திரேலியாவை இதற்கு இரண்டாவதாகச் சொல்லலாம்.

இவ்விந்துதேசத்தில் அமைக்கப்படும் விநோதப் பொருட்காட்சிசாலை மற்றத் தேசங்களின் விநோதப் பொருட்காட்சிசாலைகளினும் மிக்க விசித்திரமாயிருக்குமென்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களில் வசிப்பவர்கள் எல்லாரும் பலவகையான கைத்தொழில்களும் வர்ணவேலைகளும் செய்வதில் மிகப் பிரசித்திபெற்றவர்கள் என்பது யாவர்க்கும் தெரிந்தவிஷயமேயாயினும், அவற்றில் இந்தியாவிலுள்ள பொருள்கள் சிலவிஷயங்களில் மிக சிரேஷ்டமானவைகள். இந்துக்கள் வசிக்கும் ஸ்தானங்களுக்கும் மற்றவர்கள் வசிக்கும் ஸ்தானங்களுக்கும் எவ்வளவு வேற்றுமையுண்டோ அவ்வளவு வேற்றுமை அவ்விநோதப் பொருட்காட்சிசாலையிலும் உண்டு.

நமது தேசத்தில் செய்யப்படுகிற, ஜனங்களுக்கு உபயோகமான, எண்ணிறந்த பண்டங்களைப் பிறநாட்டார் காண்கையில் அவற்றின்மேல் ஆசையுற்று அவற்றையெல்லாம் நம்மிடமிருந்து வாங்கும்படிக்கும், நாமும் அப்படி அவர்களிடமிருந்து நமக்கு வேண்டியபண்டங்களை வாங்கும்படிக்கும் பார்ப்பது, இவ்வுலகத்திலுள்ள அனைவோரும் ஒரேநாட்டாரைப்போல ஐக்கியமாய் எல்லாநன்மைகளையும் பெற்றுச்சுகித்து வாழ்ந்திருப்பார்களென்பதற்கு அத்தாட்சியாயிருக்கின்றது.

இந்தக் காட்சிசாலையில் ஒரு புறத்திலே யானைகள் பார்த்து இவையும் தமது ஜாதியைச் சேர்ந்தவையெனப் பிரமித்துச் சண்டைபோட வரும்படியாயிருக்கின்ற இரண்டு யானைப்பிரதிமைகளும், ஒரு புறத்தில் ஆக்ராபட்டணத்தில் நெசவுத்தொழில் கற்பிக்கும் பாடசாலையில் பாட்டுப்பாடிக்கொண்டு துணிநெய்யும் சிறுவர்களென்றும், வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சும் வேலையாட்களென்றும் பார்ப்பவர் பிரமிக்கும்படியான பிரதிமைகளும் அமைத்துவைத்திருக்கின்றனர். அங்கிருந்த பயிர்களைப் பார்த்தால் உண்மையாகவே விதைவிதைத்துப் பயிரிட்ட பயிர்போலவே தோன்றின. அந்தக் காட்சிசாலையைப் பார்க்கும்போதே முன்னாளில் கண்ணபிரானுடைய நியமனத்தால் தருமபுத்திரருக்காக மயன் நிருமித்துக்கொடுத்த ஸபையிலே துரியோதனாதியர்கள் பிரமித்து வீழ்ந்தார்களென்று பாரதத்தில் சொல்லிய செய்தி ஞாபகத்திற்கு வரும்படியாக இருக்கின்றது.

மற்றொருபுறத்திலே தண்ணீர் சுரக்கும்படி ஒரு தொட்டிகட்டுவதற்கு ஆரம்பித்து நன்றாக முடிக்காமல் விடப்பட்டிருக்கின்றது. இன்னோரிடத்தில் சிறந்த பட்டாடைகளும் நாணயமான நானாதேசத்துப் பொருள்களும் பலவகைப்பட்ட வீணைமுதலிய நானாவிதமான வாத்தியங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. யுத்த பூமியில் வாசிக்கும்படியான பேரியும் இருக்கின்றது. பின்னும் ஜயபுரத்து மகாராஜாவினால் கொடுக்கப்பட்ட குதிரைச்சாமான்களும்,

பொன் வெள்ளிகளால் செய்யப்பட்ட மற்றும் பலவித வஸ்துக்களும் இருக்கின்றன.

மற்றொருபக்கத்தில் திரும்பிப்பார்த்தால் அங்கே இடுப்பிலே பிள்ளையை எடுத்துக்கொண்டு நிற்கின்றபாவனையாய் இரண்டு பிரதிமைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றின் பெயர் யசோதா கிருஷ்ணன், மற்றொன்றின் பெயர் ரோஹிணீ பலராமன். ரோஹிணீ பலராமப் பிரதிமை கொஞ்சம் சிறியது. இவ்விரண்டு பிரதிமைகளுக்கும் இக்காலத்து மாதிரியான ஆடையாபரணங்கள் அணியப்பட்டிருக்கின்றன. பின்னும் ஒருபுறத்தில் கண்ணாடிப் பெட்டிகளில் பலவகைப்பட்ட தானியங்களும், ஜயபுரத்து மகாராஜாகொடுத்த அம்பாரியும், காசிராஜாகொடுத்த தந்தப்பல்லக்கும், சித்திரவிசித்திரங்களான பாரசீகதேசத்துச் சக்கரங்களும், எருதுகளின்மேல் போடும் கண்டாளங்களும் இருக்கின்றன. மற்றோர்புறத்தில் பொன்னாபரணங்களும் வெள்ளியாபரணங்களும், ஸ்ரீரங்கபட்டணத்து துரியாதௌலத் என்கிற சபாமண்டபம்போல அழகான ஒரு மண்டபமும், பற்பலவிதமான யந்திரங்களும், மேற்கு தேசத்து இருப்புக் குல்லாய் முதலிய யுத்தசாமான்களும், அநேகவிதமான மரச்சாமான்களும், பீஜபுரத்திலிருந்து அழைப்பிக்கப்பட்ட ரத்னகம்பளங்களும் இன்னும் பற்பலவிதமான பொருள்களும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வகை விசித்திரமான பலவகைப் பொருள்கள் அமைத்த விநோதப் பொருட்காட்சிசாலையைத் திறக்கும்போது வந்துகூடிய சபையாரைநோக்கி, நமது சிரேஷ்டதேசாதிபதியாகிய ரிப்பன் பிரபு அவர்கள் உபந்யஸித்ததை ஒருவாறு சுருக்கமாய் அடியில் எழுதுகின்றோம்.

ஐயா ராஜகுமாரரே! சீமாட்டிகளே! கனவான்களே! இந்தக் காட்சிசாலையைத் திறக்க ஆரம்பிப்பதற்குமுன்னமே கர்னெல் டிரவரின் வேண்டுகோளின்படி சிறிது சொல்லப்போகின்றேன். இக்காட்சிக்கு மூலகாரணமான தாம்ஸன் துரையென்பவர் தேகத்தில் அசௌக்கியத்தினால் இங்கு விஜயம்செய்யக் கூடாதிருப்பதைப் பற்றி யாவர்க்கும் துக்கமே. அவர் தமது நோயைப் பாராட்டாமல் இங்குவந்தேயிருப்பார்; ஆயினும், வைத்தியர்கள் கட்டாயப் படுத்தியபடி அவர் வாராதிருப்பதே நன்று. இந்தக் காட்சிக்கு ஆரம்பம்செய்து கிட்டத்தட்ட ஒருவருஷமாகிறது. தேசத்துக்கெல்லாம் கொண்டாட்டமான இந்தக் காட்சியை நடத்துவதற்கு அவர் இந்தியா துரைத்தனத்தாரிடமிருந்து நியமனம்பெற்றார். எவ்வளவோ கஷ்டத்தின்மேல் அநேகருடைய சகாயத்தால் இக்காரியம் கூடியமட்டில் கைகூடி, சென்ற டிசம்பர்மாஸத்தில் வைத்த முகூர்த்தத்திலேயே இன்று நடத்தும்படியாயிற்று. அப்பொழுதே லெவ்டினெண்டு கவர்னர், இக்காட்சியை ஆரம்பிக்கையில் நானேயிருந்து

இந்தக் காட்சி மகோற்சவத்தைத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, நானும் தடைசொல்லாமல் அப்படியே ஆகட்டுமென்றேன். இந்தியா சக்கரவர்த்தினியாருக்குப் பதிலாய் இத்தனை பெரிதான அதிகாரத்தை வகிக்கின்ற எனக்கு இதைவிடச் சிறந்த பெற்றிமை வேறுகிடைக்குமோ!

இந்தியா சக்கரவர்த்தினியாருக்குத் தமது செங்கோலின்கீழ் எங்கேயாவது இம்மாதிரியானகாட்சிநடக்குமாயின், அது மிகவும் குதூகலமேயாம். இதோ பார்த்தீர்களா? மின்சாரமார்க்கமாய் "கல்கத்தாவில் ஏற்படுத்தும் காட்சியானது நிர்விக்கினமாய் நிறைவேறவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்" என்று சக்கரவர்த்தினியாரும் இதைப்பற்றித் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

சீமாட்டிகளே! கனவான்களே! நமது சக்கரவர்த்தினியாரின் திருமகனாராகிய கன்னாட் டியூக்கும், அவரது தேவியாரும் இங்குற்றிருக்கின்றமையால், நாம் ஆனந்தஸாகரத்தில் மூழ்கியிருக்கின்றோம். நான் இந்தப் பிரபுவையும் இவரது பத்தினியாரையும் இன்று இவ்விடத்திற்கு விஜயஞ்செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளத் துணிந்தபோது, இவர்கள் தட்டாது விஜயம் செய்வார்களென்பது எனக்கு நிச்சயமே. இவர்கள் இதைக் கேட்டபொழுது பேருவகைகொண்டு அதற்கு முற்றுமிணங்கினார்கள். ஐயா வேந்தர் குலக்கொழுந்தே! நீர் இவ்வண்ணம் இணங்கி இங்குற்றது உமது பெற்றோர்களுடைய சுபாவத்திற்கு ஏற்றதாயிருக்கிறதன்றோ. கனவான்களே இக்காட்சி இவ்வண்ணம் இடையூறின்றி நிறைவேறுதற்பொருட்டு இதற்குத் துணையாகநின்று எல்லாவற்றையும் சாதித்த மகான்களைப்பற்றி நான் இப்பொழுது சிறிதளவேனும் சொல்லாவிடில் அது நன்றிமறவாமையாகும். எனது ஆப்தரும் லெவ்டினெண்டு கவர்னருமான தாம்ஸன் துரை இவர்களுள் முந்தியவர். ஆதலின் அவரைப்பற்றி யான் சொல்லாதுவிடேன். தாம்ஸன் துரை இவ்வளவு பாடுபட்டிராவிட்டால் இந்தக் காரியம் இத்தனை சிறப்பாக முடிந்து இந்தக் காட்சியை நாமெல்லோரும் கண்டுகளிக்கும்படி வாய்த்திராது.

இதுவிஷயத்தில் ஜூபர்ட் துரையைத் தாம்ஸன் துரைக்கு இரண்டாவதாகச் சொல்லலாம். கல்கத்தாவில் நடக்கும் இந்தப் பெரிதான காட்சியில் இவர் ஒருவரே எல்லாவற்றையும் வகித்து நடத்துவாரென்று கேட்டபொழுது நான் அதை அவ்வளவாக நம்பவில்லை. அப்பொழுது எனக்கு இவர் திறனைப்பற்றி நன்றாய்த் தெரியாததினால் அப்படி நினைத்தேன்; ஆனால் தாம்ஸன் துரை இவர் இதுவிஷயத்தில் ஜாகரூகராயிருப்பாரென்று அப்பொழுதே என்னோடு சொல்லியிருந்தார். தாம்ஸன் துரை இவரைப்பற்றி இப்படிச் சொல்லியிருந்ததினாலும், இவர் முன்பே ஒருவாறு பிரசித்திபெற்றிருந்ததினாலும் இவரிடத்தில் ஐயம் நீங்கித் துரைத்

தனத்தாரின் நியமனம் கொடுக்கப்பட்டது. சீமான்களே! சீமாட்டிகளே! அது இப்பொழுது எவ்வாறு நிறைவேறியது பாருங்கள். ஜூலியர் துரையை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் அவையனைத்தும் அவருக்குத் தகும். இவருக்குத் துணையாய்நின்ற சபையார் இதுவிஷயத்தில் பட்ட சிரமம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லக்கூடாது என்பதை ஜூலியர் துரையே பேசுகிறார். இவர்களுள் கர்நெல் ட்ரிவர் பட்டபாடு அற்பசொற்பமல்ல. அவரது தூங்கா முயற்சியைப்பற்றித் தாம்ஸன் துரையே புகழ்கின்றார்.

சீமான்களே! சீமாட்டிகளே! நான் உங்களை வெகுநேரம் இங்கு காக்கவைத்திருப்பது சரியன்று. நான் இதற்குமுன்னம் இந்தக் காட்சிசாலையை வந்து பார்த்திராததினால் இதுவிஷயத்தைப்பற்றி இப்பொழுது உங்களோடு இன்னது சொல்லவேண்டுமென்று எனக்கு நன்றாய்ப் புலப்படவில்லை. இதுவிஷயமாய்ச் சிறிது எடுத்துப்பேசுபடி இதற்குமுந்தியே இங்கு நான் தனியேவந்து ஒரு தரம் நேரே பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்ற எண்ணம் மட்டும் எனக்குண்டு; ஆனால், இன்னும் செய்துமுடிக்காத பாகம் எவ்வளவோ இருந்ததென்று எனக்கே தெரியுமாதலாலும், கண்காட்சி திறக்குநாள் மிக நெருங்கிவிட்டதினாலும், அதைச் செய்துமுடிப்பவர்களுக்கு என்னால் இடையூறொன்றும் இல்லாதிருத்தற்பொருட்டே நான் அப்படிச் செய்யவில்லை. ஆதலால் நான் கேள்விப்பட்டமட்டில்தான் எனக்குத் தெரியும். இந்தியாதேசம் இதில் சிறப்புற்றிருக்கிறதாம். ஐயா வேந்தர்பெருமானே! அம்மா ராஜநந்தனர் பத்தினியாரே! ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்காமுதலிய தேசங்களிலிருந்து வந்திருப்பவர்களே! சக்கரவர்த்தினியாரின் செங்கோலின்கீழுள்ள பெரிதான இந்நாட்டின் தொழில்களுள் பலவகையான வேலைகள், பண்டம், விளைவுமுதலியவை இவ்வுலகமெங்கும் இப்பொழுது பரவி இருப்பதைக் காட்டிலும் அதிகமாய்ப் பரவிப் பரஸ்பரம் மிகுந்த நன்மை கிடைக்கலாகுமென்பது எனது துணிவு. ஆஸ்திரேலியாவிலிருந்து திரளான பொருள்கள் இக்காட்சிக்கு வந்திருக்கின்றனவென்றும், அவை மிகச் சிறந்தனவென்றும் கேட்டு மகிழ்கின்றேன்; ஆஸ்திரேலியாவிலிருந்து துரைமார் பலர் இந்நகரத்துக்கு வந்திருக்கிறார்களென்றும், இன்னும் சிலர் வரப்போகிறார்களென்றும் கேட்டுக் களிக்கின்றேன். இங்குள்ள அனைவோர்க்கும் இதைக் கேட்க உவப்பாயிருக்குமென்று நினைக்கிறேன். லெவ்டினெண்டு துரையாகிய தாம்ஸன் துரை, இனிமேல் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் வெகு ஊதியமுள்ள வியாபாரம் நடக்கப்போகிறதென்று உறுதியாகச் சொல்லுகிறார். நானும் அப்படியேதான் ஆகுமென்று நினைக்கிறேன். இது கைகூடிவருமாயின், இக்காட்சியின் பயன் கைமேற்கிடைத்ததென்றே சொல்லவேண்டும்;

சிலநாளைக்குமுன்னே நமது யுவராஜாவானவர் 1886-ம் வருஷத்தில் காட்சி சாலையொன்று அமைக்கவேண்டுமென்றும், அதில் அங்கிலேய ராஜ்யமெங்குமுள்ள பொருள்களைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்றும், அதில் இந்தியாவிலுள்ள பொருள்கள் செவ்வையாய் வைக்கப்படவேண்டுமென்றும் இங்கிலாந்தில் சொன்னார். எனது மநோரதமும் இதுவே. இப்பொழுதிங்கிருப்பதைவிட அதற்கு இன்னும் சிறப்பாகப் பொருள்களைச் சேகரித்தனுப்பவேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்ற நாட்டார்களுக்கு இந்தியாவின் அருமை பெருமை நன்றாய்த் தெரிந்து இந்நாட்டார்களுக்கும் அவர்களுக்கும் ஓயாமல் செழிப்பாய் வர்த்தகம் நடந்துகொண்டிருக்கும். இதை முடிப்பதற்கு முன்னமே நான் இன்னொன்றையும் சொல்லவேண்டும்: இந்தக் காட்சி இவ்வளவோடு மறைந்துபோகாமல் வேரூன்றி நிலை பெற்றிருந்து, தொழில், வியாபாரம் முதலியவை பெருகித் தழைத்தோங்கும்படியாகவேண்டும் என்று தாம்ஸன் துரை அபிப்பிராயப்படுகிறார். இவ்வாறு நடந்தேறினால் அது க்ஷேமமேயாம். சீமாட்டிகளே! கனவான்களே! இம்மாதிரியான காட்சியின் பயனைப் புகழ்ந்து புகழ்ந்துபேசி உங்களை இன்னும் காத்திருக்க வையேன். 1851-ம் வருஷத்தில் நமது சக்கரவர்த்தினியாரின் மணவாளனார் காட்சியொன்றை ஏற்படுத்தப் புகுகையில், அது பயனற்றதென்று நினைத்து அவர்மேற் குறைகூறி அவரை இகழாதாரில்லை. ஆனால் அம்மகான் தனக்கு இயற்கையாகிய பொறுமையால் அவையனைத்தையும் சகித்துத் தாம் எடுத்தகாரியத்திற் கைசோராதிருந்ததினால், அது இனிதுமுடிந்து அளவற்ற நன்மைக்கு வித்தாயிற்று. 1851-ம் வருஷத்தில் மாட்சிமைதங்கிய நமது சக்கரவர்த்தினியாரின் கொழுநனார் அப்பொழுது நடந்த காட்சியின் பெருமையை வியந்து கூறியிருக்கிறார்: அதாவது,

'எங்குமுள்ள பொருள்களைக் கொண்டுவந்து ஏராளமாய்க் குவித்திருக்கிற இந்தக் காட்சியைப் பார்ப்பவர்களுக்கு, கடவுள் நமக்கு இதற்குமுந்தியே அளித்திருக்கிற பரமோபகாரத்தின் பெருமையனைத்தும். மனதில் நன்றாய்ப் புலப்படும்; அன்றியும் நாமெல்லோரும் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருந்து பரஸ்பரசகாயம் செய்துகொண்டிருந்தாலன்றி, அவற்றாலுண்டாகும் பயன்களைப் பூரணமாய் அனுபவித்தல் கூடாதென்று அறிந்துகொள்ளலாம்; அதன்பின் இவ்வுலகத்தில் உள்ள எல்லோரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருந்துகொண்டு, சமாதானமாயும் அன்பாயும் நடந்துவந்தால் எல்லாநன்மையும் பெறலாம்' என்றார். இப்போது நான் சொல்வதும் இந்த வார்த்தையே; இனிக் காட்சிசாலையைத் திறக்கலாம் என்று கூறினார். திறந்தபிறகு அங்குள்ள அற்புதங்களைக் கண்டு அனைவரும் களிப்படைந்தார்கள்.

## தந்தையின் வீணை.

விஜயன் என்னும் ஒருவன் உமயாபுரத்தில் தன் பாட்டியார் வீட்டோடு இருந்தான். அவன் தந்தை உறையூரில் சிறந்த வைணிகனாயிருந்து வெகுபேர்களுக்கு வீணைவாசிக்கக் கற்பித்துக்கொண்டிருந்தான். விஜயன் சிறுபிராயந்தொட்டே தந்தையின் வீணை நாரதவீணையினும் சிறப்புடையதென்று அதில் அதிக விருப்பங் கொண்டிருந்தான். தன் மகனுக்கு வீணையில் மிக்க காதலென்றறிந்த தந்தை ஒவ்வொரு வேளையில் அதை அவன் கையிற்கொடுத்தும் வந்தானாகையால் விஜயனுக்கு அதின்மேல் பற்று இன்னும் சற்று அதிகமாகி, தானும் ஓர் வைணிகனாகவேண்டுமென்கிற பேரவா அவன் மனதில் குடிகொண்டது. ஆயினும் மனிதர் வாழ்வு நிலையற்றதாகையால் அவன் பிதா விதிவசத்தால் இருந்தாற்போலிருந்து இறந்துபோனான். அவன் பட்டிருந்த கடனையடைக்கப் போதுமான திரவியமில்லாமையால், அவன் மனைவி வீட்டிலிருந்த பண்டங்களையெல்லாம் ஒருங்கேவிற்று அக்கடனை அடைக்கவேண்டியதாயிற்று. விஜயனுக்குத் தன் பிராணனெல்லாம் தந்தையினுடைய வீணையின்மேலென்றாலும் தாய் அவனை நோக்கி: அப்பா மகனே! "கடன்படாவாழாமை காண்டலினிது" என்று பெரியோர் உரைத்திருக்கின்றனரன்றோ? உன் தந்தையாருக்குப் பிராணபதமாயிருந்த இந்த யாழை விற்க எனக்குக் கடுகத்தனையும் சம்மதமே கிடையாதுதான்; ஆயினும் அவர் பட்டிருக்கும் கடனை நாம் இறுத்தலே முறையாகுமென்றாள். அன்னையார் இவ்வண்ணம் உரைக்கக்கேட்டு விஜயன் ஒன்றும் வாய்திறவாதிருந்தான். உடனே அவள் வீட்டிலுள்ளவற்றோடுகூட அந்த வீணையையும் விற்றுக்கணவன்பட்டிருந்த கடன்முழுவதையும் அடைத்தாள். இப்படி எல்லாவற்றையும் விற்றபின்பு ஜீவனோபாயத்திற்கு வழியில்லாமையால், அவள் தன் தாய் வசித்துக்கொண்டிருந்த உமயாபுரமென்னும் கிராமத்துக்கு விஜயனுந் தானுமாகச் சென்றாள். "பட்டகாலே படும், கெட்ட குடியே கெடும்" என்றவண்ணமாய், போகும் வழியிலேதானே அவளுக்கு நோய்கண்டு அவளும் இறந்துபோனாள். இவ்வாறு விஜயன் தந்தையை இழந்த மூன்றுமாதத்திற்குள்ளே தாயையும் இழந்தான். முளைக்கிற முளையில் விஜயன் இப்படித் தாய்தந்தையர் இருவரையும் ஏககாலத்தில் பறிக்கொடுத்தானென்றாலும், அவன் உமயாபுரத்தில் தன் பாட்டியாரிடஞ்சேர, அவள் கண்ணை இமை காப்பதுபோல இப்பேரப்பிள்ளையைப் போற்றி வளர்த்துவந்தாள். அதனால் யாருமற்ற அநாதைகளைப்போலிராமல் அவன் எவ்வளவோ மேலாயிருந்தான். வளர்த்தெடுத்த வாஞ்சையினால் பாட்

டியார் தன் பிராணனெல்லாம் அவன்மேல் வைத்திருந்தாள்; அவ்வாறே விஜயனும் தன் பாட்டியாரைத் தன்னைப் பெற்றெடுத்த தாயினும் மேலாக மதித்துவந்தான். விஜயன் தன்னுடைய சுக துக்கங்களில் ஒன்றையும் ஒளியாமல் கறந்தபால் கறந்தபடி தன் பாட்டியாருடன் சொல்லிக்கொண்டிருப்பானாதலால், வீணை போய் விட்டதைப்பற்றியும் சொல்லி விசனப்படுவதுண்டு. அவன் ஒரு நாள் அந்திநேரத்தில் கணப்பண்டை தன் பாட்டியுடன் குளிர்காய்ந் துகொண்டிருக்கையில், பாட்டி! நான் தந்தையின் வீணையையிழந்த துக்கத்தை என்னென்று சொல்லுவேன்? அந்த வீணை பிறர்க்கு அத் தனையாகப் பயன்படாது; ஆயினும் அது என்னிடத்தில்மட்டும் இருந்திருக்குமேயானால் நான் நன்றாய் வீணைவாசிக்கப் பயின்றி ருப்பேன். அம்மா! நீர் என்விஷயத்தில் இப்படிச் சும்மாயிருப் பது நன்றோ? எனக்கொரு வீணை வாங்கித் தரலாகாதா? என் தாய் அந்த வீணையை அப்படி விற்றுப்போடலாமா? என, அவள், குழந்தாய்! உன் தாய் அப்படி அதை விற்றது முற்றும் சரியே. நாம் நமது கடமையைச் செய்வதே நன்று; மற்றவற்றிற்குக் கடவுளிருக்கிறார் என்றாள். அதற்கு விஜயன், பாட்டி! நீர் இப் பொழுது எனக்குச் சிறிது உதவிசெய்தால் நான் எப்படியும் முன்னு க்குவருவேன்; நான் சின்னஞ்சிறுவனல்லவோ? எவ்வாறு பொருள் தேடுவேன்? வீணை வாங்கிக்கொள்ளவேண்டுமென்று எனக்கு அதிக அபேக்ஷையாயிருக்கிறதென்றான். பொருள்தேடும் வழிகளைப்பற்றி அந்தக் கிழவி அவனுக்குப் பலவாறாக உபதேசிக்க, அவனும் நல்ல தென்று அங்கீகாரஞ்செய்துகொண்டு, பள்ளிக்கூடத்தில் படிக்கும் வேளைபோகத் தினந்தோறும் அந்திப்பொழுதில் இரண்டுமணி நேரம் புலத்திலே வேலைசெய்கிறதென்று ஒரு குடியானவனிடத்தில் வேலையில் அமர்ந்துகொண்டான். அந்தக் கிராமத்திலிருந்த ஸஞ்சீவி என்னும் ஒரு சிறு வியாபாரி இவனுக்கு உற்ற நற்றோழனாகையால் அவன் இவனோடு வார்த்தைசொல்லிக்கொண்டிருக்கையில், இவ னுக்கு வீணையின்மேல் வெகு ஆசையென்று அறிந்துகொண்டு, சிறு வனே! நான் வியாபாரத்தின்பொருட்டு பொதிமாட்டை ஓட் டிக்கொண்டு அடிக்கடி வெளியே போவதுண்டாகையால், எங்கே னும் நல்லதாயும் விலை நயமாயும் வீணை அகப்படுகிறதாயிருந்தால் வாங்கிக்கொண்டுவருகிறேன் என்றான். அந்த வர்த்தகன் அம்முறை வெளியே வியாபாரஞ்செய்துவிட்டுத் திரும்பிவர நாலுமாதத்துக்கு மேலாயிற்று. ஒருநாள் ஸஞ்சீவி பொதியோடு தன் எருதை ஓட்டிக்கொண்டு ஊருக்குள்ளே வருவதை விஜயன் கண்டமாத்தி ரத்தில் விரைந்தோடி, அவனை க்ஷேமம்விசாரிப்பதற்குமுன்பே மிகப் பரபரப்போடு, ஐயா! வீணை கொண்டுவந்தீரோ என்றான். அதை ஸஞ்சீவி கேட்டு நகைத்துச் சிரக்கம்பஞ்செய்து, அப்பா விஜயா! நான் இம்முறை தொலைதூரம் போயிருந்தேன்; உறையூ

ருக்குப் போகையில் அங்கே ஓர் கடையில் பழையவீணையொன்று விற்பனைக்காகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது என, விஜயன் ஆமய்யா! உறையூர்தான் நான் பிறந்தவிடம்; அவ்விடத்திலிருந்து வந்திருக்கிறதாகையால் அந்த வீணை எனக்கு மிகவும் இனியதாகும் என்றான். ஸஞ்சீவியோடுகூடவே விஜயன் அவன் குடிசைக்குச் சென்றான். ஸஞ்சீவி பொதியையிறக்கி அதை அவிழ்த்து அதன் அடியிலிருந்த பழைய வீணையையெடுத்துத் தன் தோழன்கையிற் கொடுத்தமாத்திரத்தில் அவனுக்கு ஒருடம்பு ஈருடம்பாய்ப் பேருவகையுண்டாகி ஆவேசங்கொண்டவனைப்போல் அட்டகாசஞ்செய்யத் தலைப்பட்டான். ஸஞ்சீவி, விஜயா! உனக்கு வீணையின்மேல் அதிகமான பற்று என்பதை நான் அறிவேன்; ஆயினும் இதன்மேலிருக்கிற ஆசைக்குத் தக்கபடி இது உனக்குப் பயன்படுமோ என்பதுதான் எனக்குச் சந்தேகம் என, விஜயன், ஐயா! இதன் வரலாறு உமக்குத் தெரிந்திராது; இது என் தந்தையின் வீணை; அதிஷ்டவசத்தால் மீண்டும் எனக்குக் கிடைத்தது என்றான். பின்பு அந்த யாழின் விர்த்தாந்தத்தைக் கேட்டு ஸஞ்சீவியும் களிப்புற்றான். அன்றுதொட்டு விஜயன் தன் தந்தையின் வீணையையெடுத்து வாசிக்கத்தொடங்கி வீணைவாசிப்பதில் நாளளவிலே தேர்ச்சியடைந்து சிறந்த வைணிகனுயினன். விஜயன் பெரியவனைகாலத்திலும் அவனுக்கு அடிக்கடி தன் பாட்டியாரின் ஞாபகம் வரும்; "நாம் செய்யவேண்டியதைச் செய்வதே நன்று; மற்றவற்றிற்குக் கடவுளிருக்கிறார்" என்று அவள் தனக்குச் சொன்ன நற்புத்தியைத் தானும் தன் மக்களுக்கு மந்திரம்போல உபதேசித்துக்கொண்டிருப்பான்.

---

## சகோதரப்பிரீதி

(யக்ஷப்பிரச்னம்.)

---

தருமபுத்திரன் தம்பிமார்களைத் தேடிக்கொண்டு பொய்கைக் கரைக்குப் போய் அங்கிருந்த யக்ஷன் கேட்ட வினக்களுக்கெல்லாம் தக்க விடைகொடுத்து அவனைக் களிக்கச்செய்தானெனச் சென்ற சஞ்சிகையில் சொன்னோமே. அவ்வினக்களையும் விடைகளையும் அடியில் ஒருவாறு எழுதுகின்றோம்.

யக்ஷன்: எல்லா உலகங்களையும் விளங்கச்செய்கின்ற சூரியனை நடத்துகின்றவனெவன்? அந்தச் சூரியனைப் பிடித்துத் திருப்புகின்றவனெவன்? அவன் உதிப்பதும் அஸ்தமிப்பதும் எதனுலே? அவனுக்கு ஆதாரமாயிருப்பது யாது?

தருமன்: சூரியனை நடத்துவது பரப்பிரம்மம்; அவனைப் பிடித்துத் திருப்புகின்றவர் தேவர்கள்; அவன் உதிப்பதும் அஸ்தமிப்பதும் தருமத்தினாலே; அவனுக்கு ஆதாரமாயிருப்பது சத்தியம்.

யக்ஷன்: மனிதன் சுரோத்திரியனாவது எதனால்? அவன் மகிமைபெறுவது எதனால்? சகாயமுடையவனாவதெப்படி? புத்திமானாவது எதனால்?

தருமன்: வேதத்தின் பொருள்களை நன்றாய் உணர்வதனால் சுரோத்திரியனாகிறான்; விசேஷமாய்த் தவஞ்செய்வதனால் மகிமையடைகிறான்; தைரியத்தினால் சகாயமுள்ளவனாகிறான்; பெரியோர்களை உபாஸிப்பதனால் புத்திமானாகிறான்.

யக்ஷன்: மனிதன் தெய்வத்தன்மை பெறுவது எப்படி? அவனுக்கு நல்லவனெனப் பெயர் உண்டாவதெப்படி? கெட்டவனெனப் பெயர் உண்டாவதெப்படி? மனிதத்தன்மை உண்டாவதெப்படி?

தருமன்: வேதங்களை ஓதுவதனால் தேவத்தன்மை பொருந்துகின்றனன்; தவம்செய்வதனால் நல்லவனெனப் பெயர் உண்டாகின்றது; லோகாபவாதத்தினால் கெட்டவனெனப் பெயர் உண்டாகின்றது; மரணமடைவதனால் மனிதத்தன்மை உடையவனாகிறான்.

யக்ஷன்: பிழைத்தும் பிழைத்திராதவனெவன்?

தருமன்: தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் சேவகர்களுக்கும் திருப்திசெய்விக்காமல் தானனுபவிப்பவனே பிழைத்தும் பிழைத்திராதவன்.

யக்ஷன்: பூமியினும் பாரமானது எது? ஆகாயத்தினும் உயரமானது எது? வாயுவினும் வேகமானது எது? மனிதற்கு மிகவும் தாங்கக்கூடாதது எது?

தருமன்: பூமியினும் பாரமானவள் தாய்; ஆகாயத்தினும் உயரமானவர் தந்தை; வாயுவினும் வேகமானது மனது; மனிதற்கு மிகவும் தாங்கக்கூடாதது சிந்தை.

யக்ஷன்: தூங்கும்போதும் கண்விழித்திருப்பது எது? பிறந்தும் அசையாமல் இருப்பது எது? மனதில்லாதது எது? வேகத்தால் விர்த்தியடைவது எது?

தருமன்: தூங்கும்போதும் கண்விழித்திருப்பது மீன்; பிறந்தும் அசையாமல் இருப்பது முட்டை; மனதில்லாதது கல்; வேகத்தால் விர்த்தியடைவது நதி.

யக்ஷன்: தேசயாத்திரை செய்பவனுக்குத் துணை எது? கிரகஸ்தனுக்குத் துணை எது? ரோகிக்குத் துணை எது? இறப்பவனுக்குத் துணை எது?

தருமன்: தேசயாத்திரை செய்பவனுக்குக் கைப்பொருள் துணை; கிரகஸ்தனுக்கு இல்லாள் துணை; ரோகிக்கு வைத்தியன் துணை; இறப்பவனுக்குத் தானம் துணை.

யக்ஷன்: தருமத்திற்கு முக்கியமான ஆதாரம் எது? புகழ்ச்சிக்கு ஆதாரம் எது? புண்ணியலோகம் பெறுவதற்கு வழி எது? சுகமடைவதற்கு வழி எது?

தருமன்: பூததயை பச்சாத்தாபமுடைமையே தருமத்திற்கு முக்கியமானது; புகழ்ச்சிக்குக் கொடை ஆதாரமானது; புண்யலோகம் பெறுவதற்கு சத்தியமே வழி; சுகம்பெறுவதற்கு நல்லொழுக்கமே வழி.

யக்ஷன்: மனிதர்களுக்குத் தமக்கு ஒப்பாயிருப்பவன் யார்? தெய்வத்தினல் அமைந்த துணை யார்? முதன்மையான ஜீவனோபாயமெது? முக்கியமாக மனிதர் அனுசரிக்கவேண்டியதெது?

தருமன்: மனிதர்க்குத் தமக்கு ஒப்பானவன் புத்திரன்; தெய்வத்தால் அமைந்த துணை இல்லாள்; முதன்மையான ஜீவனோபாயம் மேகம்; முக்கியமாய் மனிதர் அனுசரிக்கவேண்டியது பரோபகாரம்.

யக்ஷன்: எல்லாச் செல்வங்களிலும் பெருஞ்செல்வமெது? எல்லாப் பேறுகளிலும் பெரும்பேறு எது? எல்லாச் சுகங்களிலும் பெருஞ்சுகம் எது?

தருமன்: எல்லாச் செல்வங்களிலும் கல்வியே பெருஞ்செல்வமாம்; எல்லாப் பேறுகளிலும் நோயற்ற வாழ்வே பெரும்பேறும்; எல்லாச் சுகங்களிலும் மனத்திருப்தியே பெருஞ்சுகமாம்.

யக்ஷன்: எல்லாத் தருமங்களிலும் உத்தமமான தருமமெது? எப்பொழுதும் பயன்தருவதான தருமமெது? எதை அடக்கினல் துக்கமுண்டாகாது? யாருடைய சிநேகம் ஒருபொழுதும் அழியாது?

தருமன்: ஜீவவதை செய்யாமையே பெருந்தருமமாம்; யோகாப்பியாசமே எப்பொழுதும் பயன்தருவதாம்; மனதை அடக்கினல் ஒருபொழுதும் துக்கமுண்டாகாது; நல்லோர்களுடைய சிநேகம் ஒருபொழுதும் அழியாது.

யக்ஷன்: எதை ஒழித்தால் யாவருக்கும் நல்லவனுகிருன்? எதை ஒழித்தால் துக்கிக்காதவனுகிருன்? எதை ஒழித்தால் செல்வமுள்ளவனுகிருன்? எதை ஒழித்தால் சுகமுள்ளவனுகிருன்?

தருமன்: அகங்காரத்தை ஒழித்தால் யாவருக்கும் நல்லவனுகிருன்; கோபத்தை ஒழித்தால் துக்கிக்காதவனுகிருன்; ஆசையை ஒழித்தால் செல்வமுள்ளவனுகிருன்; லோபத்தை ஒழித்தால் சுகமுள்ளவனுகிருன்.

யக்ஷன்: எதனல் இவ்வுலகம் சூழப்பட்டிருக்கின்றது? எதனல் இவ்வுலகம் பிரகாசிப்பதில்லை? எதனல் சிநேகிதனை இழந்துபோகின்றனர்? எதனல் நற்கதியடைவதில்லை?

தருமன்: அறியாமையால் இவ்வுலகம் சூழப்பட்டிருக்கின்றது; இருளினல் பிரகாசிப்பதில்லை; பொருளாசையால் சிநேகிதனை இகழ்ந்து போகின்றனர்; இவ்வுலக வின்பங்களின் ஆசையால் நற்கதியடைவதில்லை.

யக்ஷன்: பிழைத்தும் பிணமாயிருப்பவன் எவன்? அழிந்துபோன ராஜ்யம் எது?

தருமன்: பணமில்லாதவனே பிழைத்தும் பிணமென்னப்படுவான்; அரசனில்லாத ராஜ்யமே அழிந்துபோன ராஜ்யமாம்.

யக்ஷன்: அறிவாவதென்ன? தயையாவதென்ன? நடுநிலைமையாவதென்ன?

தருமன்: தத்துவார்த்தங்களைத் தெரிந்துகொள்வதே அறிவெனப்படும்; யாவருடைய நன்மையையும் கோருவதே தயையெனப்படும்; யாவனையும் ஒரேமனதாய்ப் பார்ப்பதே நடுநிலைமையாம்.

யக்ஷன்: ஸ்நானமென்பதென்ன? கொடையாவதென்ன? பண்டிதனெனப்படுவோன் யார்?

தருமன்: மனதிலுள்ள மலங்களைப் போக்குவதே ஸ்நாநமாம்; குடிகளைக் காப்பாற்றுவதே கொடையாம்; தருமங்களை உணர்ந்தவனே பண்டிதனெனப்படுவான்.

யக்ஷன்: களிப்புற்றிருப்பவன் எவன்? உலகத்தில் ஆச்சரியமெது? நாம் நடக்கவேண்டிய நல்வழியெது?

தருமன்: மூன்ரும் யாமத்திலாயினும் நான்காம் யாமத்திலாயினும் வெறும்சோருவது சாப்பிட்டுக்கொண்டு கடன்படாமலும் ஒருவற்கு அடிமைப்படாமலும் எவன் வாழ்கிருனே அவனே களிப்புற்றவன்.

நாள்தோறும் அநேகர் இறந்து யமலோகத்திற்குப் போய்க்கொண்டிருப்பதை விடாமற் பார்த்துக்கொண்டிருந்தும், பிழைத்திருப்பவர்கள் தாம் சிரஞ்சீவியென்று எண்ணிக்கொண்டிருக்கிருர்களே இதுதான் உலகத்தில் பெரிய ஆச்சரியம்.

வேதங்களும் ஒருவழியல்ல; புராணங்களும் ஒருவழியல்ல; நாமே பலவற்றையும் பார்த்து உண்மையைத் தெரிந்துகொள்வது மிகக் கடினமானது. ஆதலின் பெரியோர்கள் நடத்திக்காட்டிய வழியே நமக்கு நல்வழியாம்.

# காலக்கிரமநகரம்.

காலக்கிரமநகரம் என்பது இந்தப் பூகோளபடங்கள் யாதொன்றிலும் காணப்படாது. நான் ஒருநாள் இராத்திரி அதனைக் கனவில் கண்டு, மறுநாள் காலைப்போசனகாலத்தில் குழந்தைகளுக்குச் சொல்லியிருக்கிறேன்.

கனவை ஒவ்வொரு வார்த்தையும் விடாமல் கியாபகப்படுத்திக்கொள்வது எவற்குங் கூடியதன்றென்பது யாவர்க்கும் தெளிவாய்த் தெரிந்தவிஷயமேயல்லவா? அவ்வண்ணமே நான் கண்டதிலும் சிறிதளவு ஒருவேளை மாறியிருந்தாலும், அநேகமாய்ச் சரியாகவே ஞாபகமிருக்கின்றது, சொல்லுகிறேன். நான் பிறதேசமொன்றில் யாத்திரைபோய்க்கொண்டிருக்கையில், ஓர் விநோதமான நகரத்துக்குப் போனதாகக் கனவுகண்டேன். அங்கே யாவரும் வியக்கத்தக்கதாயிருந்த விசேஷம் யாதெனில், அவ்விடத்தில் வாழும் மனிதர்கள் யாவரும் நேரத்தவறின்றி நடந்துவந்தனர். சிறுவர்கள் காலைப்போசனத்துக்கும், பள்ளிக்கூடத்திற்கும், ஒழிவுதினங்களில் கோவில்களுக்கும், காலத்தவறின்றிப் போய்வந்தார்கள். உபாத்தியாயருடைய வகுப்புப்புத்தகத்தில் பிள்ளைகளின் நேரத்தவறுக்காகப் புள்ளியிட யாதொரு இடமும் கண்டிருக்கவில்லை. பெரியவர்களும், கோவிலுக்கும், சபைகளுக்கும், உபநியாசங்களுக்கும், பின்னும் பலகாரியங்களுக்கும் நேரவழுவின்றி வந்துகொண்டிருந்தார்கள். இருப்புப்பாதைவண்டி தங்குமிடங்களிலும், ஓடத்துறைகளிலும், நாணயசாலையிலும், ஒவ்வொருவரும் அந்தந்தக் காலங்களில் தப்பாமல் போய் வந்துகொண்டிருந்தனர். நேரந்தப்பி வேலைக்குப் போனவர்களுமில்லை, பெருமூச்செறியும் பரபரப்போடு ஓடிவந்தவர்களுமில்லை. இப்படிப்பட்ட விடத்தை நான் எங்குங் கண்டதேயில்லை. அங்கிருந்த ஒரு கனவானை அப்பட்டணத்தின் பெயர் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர், "கால" வென்பதுடன் வேறுசில சேர்த்து, அதுதான் அதன் நாமமென விடைகொடுத்தனர். அதனை அவர் சொல்லியவண்ணம் சொல்லமுயன்று—கால—கரம், கால—கணகரம், கால—ரமிகணகரம், காலக்கிரமிகணகரம், காலக்கிரமிகணகரக்கிரமி—என்று இப்படி அப்பெயரை வாயினுல் தவறி உச்சரித்துக்கொண்டிருக்கையிலேயே விழித்துக்கொண்டேன். நான் அப்பொழுது செய்ய மோசம்போனது என்னவென்றுல், அந்நகரமிருக்குந் தேசம் யாதெனக்கேட்க மறந்தேன். கேட்டிருந்தால், இப்பொழுது அதனுபநிபந்தனைப்பட்டோலைகளையெழுதி வருவித்துக்கொள்ளலாம். மேலும் அது கோடைக்காலத்

தில் சவுக்கியத்துக்காகப் போயிருக்கத்தக்கவிடமென, எனக்கு அறிமுகமானவர்களுக்கு எடுத்துரைக்கவுங் கூடுமானதாயிருக்கும்.

ஆயினும், இதைப் படிக்குஞ் சிறுவர்களுக்கு இதனின்றுந் தேறுகின்ற நீதி என்னவெனில், படுக்கையிலும், துயிலெழுகையிலும், பள்ளிக்கூடத்திலும், போஜனகாலத்திலும், யார் நேரத்தவறின்றி நடக்கின்றனரோ அவர்களெல்லாரும் அந்தக் காலக்கிரம நகரவாசிகளாவார்கள் என்பதுதான்.

## எது உத்தமமானது?

(ஒரு கதை.)

புஷ்பபுரியில் ஒரு ஏழைவீட்டிலே கமலம் என்று ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு அந்தப் பட்டணத்து அரசன்மகளாகிய ஸோமப்பிரபை என்பவளைப்போல ஒரு வேலையுஞ்செய்யாமல் சுகமாக வாழ்ந்திருக்கவேண்டுமென்று ஆசை. வேனிற்காலத்தில் ஒருநாள் அதிகாலையில் கமலம் தன் படுக்கையைவிட்டு எழுந்திருக்கையில், ஓகோ, நான் என்னபாவஞ்செய்தேனோ? இப்படி வறியோர்வயிற்றில் ஏன் பெண்ணாய்வந்து பிறக்கவேண்டும்; ஸோமப்பிரபை பண்ணினபுண்ணியமே புண்ணியம்! ஒருநாளைப்போலவே தினந்தோறும் கோழிகூப்பிடுமுன்னேதானே படுக்கையைவிட்டெழுந்து எலும்புநொறுங்க நான் ஏன் இத்தனை அரும்பாடு பெரும்பாடு படவேண்டும்! அக்கினிபகவான்வந்து அடுப்புமூட்ட, வருணபகவான் தண்ணீர்மொண்டுகொண்டுவர, வாயுபகவான் மடைப்பள்ளியைப் பெருக்கிச் சுத்தப்படுத்திச் சமைப்பதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்ய, நளன் பாகஞ்செய்ய, தெய்வமகளிர் அவ்வன்னத்தைப் பரிமாறினாலன்றோ என் மநோரதம் நிறைவேறும். பொழுதுவிடிந்தால் நகந்தேய அடுப்புச்சாம்பலை வாருவதிலும், கரிப்பானைமுதலியவைகளைக் கழுவுவதிலுமே என் பிராணனுக்கு வருகிறதே; ஆயினும், இப்படிச் சொல்லி என்ன பயன்? மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுகிறதுபோலிருக்கிறதேயன்றி வேறல்லவென்றாள். ஆயினும் உடனே அவள் பளிச்சென்று படுக்கையைவிட்டெழுந்து பம்பரம்போல வீட்டு வேலைகளனைத்தையுஞ் செய்துகொண்டிருந்தாள். கிழக்குவெளுத்து அருணோதயமாகிச் சூரியன் பொன்னிறமான மேகத்தினின்றும் உயரவெழுந்துகொண்டிருந்தான்; பறவைகளெல்லாம் களித்துப் பாடிக்கொண்டிருந்தன; அடிவானத்தில் பற்பல நிறமுள்ள மேகப்படலமானது சூரியனை எதிர்கொண்டழைப்பதுபோல எங்கும் பரந்து நிறைந்திருந்தது; மலர்ச்சோலைகளிலுள்ள புஷ்பங்கள் பனித்

துளிகளால் நிறைவுற்று இளம்வெயிலில் பளபளவென்று பிரகாசித்துக்கொண்டிருந்தன. புஷ்பவாசனையினால் பூமியெங்கும் குமுகுமுவென்று பரிமளம் வீசியது. கமலம் படுக்கையைவிட்டெழுந்ததும் ஊற்றுக்குப் போய் ஸ்நானஞ்செய்துவிட்டுக் குடத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டுவந்து வீட்டில் வைத்துவிட்டு வீட்டு வேலைகளையெல்லாம் பரபரவென்று உல்லாசமாய்ச் செய்துகொண்டிருந்ததைப் பார்க்கையில் இவளொரு தெய்வப்பெண்தானோ வென்று ஐயுறத்தக்கதாகவேயிருந்தது. நொடிப்பொழுதில் அடுப்பு மூட்டியாயிற்று; நிமிஷத்திற்குள்ளே சமயலாய்க் காலைப்போஜனமாகவே, கரிப்பாத்திரங்களெல்லாம் பளபளவென்று தேய்த்து வைக்கப்பட்டன. கமலத்தின் வீட்டில் இத்தனை வேலையாயிற்றென்றாலும், ஸோமப்பிரபை நித்திரைதெளிந்து இன்னும் தன் பஞ்சணைமெத்தையிலிருந்து எழுந்திருந்தபாடில்லை! அவள் சோம்பல் முறித்துக்கொண்டு கொட்டாவியும் குறுகுறுப்புமாய்ப் படுத்தபடுக்கையை விட்டெழுந்திருப்பதற்குள்ளே வெயிலேறி நெருப்பாய்க் கொளுத்தத் தலைப்பட்டது. அவள் ஆடைதரிக்கும் அறைக்குள் அலங்காரமாய் அன்று பறித்துவைத்திருந்த மலரெல்லாம் வாடி வதங்கத்தலைப்பட்டன.

ஸோமப்பிரபையானவள் வெயில் அதிகரித்ததென்று கண்டு, அதன் கொடுமையினால் படுக்கையை விட்டெழுந்து வெளியே போகப் பயந்து, இதென்ன வெயில்! நெருப்பாய்க் கொளுத்துகிறது! இந்தக்கொடும்வெயிலில் மனிதர் என்னென்றெழுந்து வெளியே போய் நீராடிவந்து வேறுவஸ்திரம் தரித்துக்கொள்ளுகிறார்கள்? என்னாலாகாதம்மா; இந்தப்படியே படுக்கையிலிருந்தவாறே காலைப் போஜனஞ்செய்கிறேன்என்றுசொல்லிஅதிலேதானேகிடந்துபுரண்டு கொண்டிருந்தாள். ஸோமப்பிரபை கோணவழியில் சுகந்தேடப்போக அந்தச் சுகம் அவளைக் கண்டு ஓடத்தலைப்பட்டது: ஒரு வேலையுமின்றிப் படுத்தபடுக்கையோடிருந்தமையால், அவளுக்குப் பசி தாகமென்பவையேயில்லாமல் மிகவும் நோய்க்காளானாள். அவளுக்கு இந்த உண்மைதெரியாது, தனக்குண்டாகும் வருத்தங்களுக்கெல்லாம் வெயிலே காரணமென்று நினைத்தாள். அவள் கொண்டிருந்த எண்ணமெல்லாம், தான் எந்நேரமும் உல்லாஸமாயிருந்து, ஒரு வேலையையுஞ்செய்யாதிருக்கவேண்டுமென்பதே. கமலம் தன்னுடைய கரடுமுரடான படுக்கையில் படுத்துறங்கிய சுகத்தின் நூற்றிலொருபங்கையேனும் ஸோமப்பிரபை தன்னுடைய அன்னத்தூவிப் பள்ளியில் அனுபவித்தாளோ, இல்லை. கமலத்தைப்போலல்லாவிட்டாலும், ஸோமப்பிரபை ஏதேனும் கொஞ்சம் வேலைசெய்தாலல்லவோ சிறிதாயினும் சுகங்கிடைக்கும். இவ்வாறு ஸோமப்பிரபை நாளுக்கு நாள் சோம்பல் அதிகரித்து நோய்பிடித்து உண்டியுறக்கமில்லாமல்வருத்தப்படுகையில், கமலம்தன்உழைப்பினால்நாளுக்குநாள்

மிகுந்த தேகசவுக்கியமும் சுறுசுறுப்பும் உடையவளாகி, முதலில் தான் கொண்டிருந்த கொள்கையெல்லாம் தப்பானவையென்று தெரிந்துகொண்டாள். யாரும் காலையிலெழுந்து வீட்டுக்குவெளியே உலாவித் தாங்கள் செய்யவேண்டிய வேலையை வஞ்சனையின்றிச் செய்யாவிடில் எவ்வகைச் சுகமும் கிடைப்பதருமை. சோம்பேறிகளுக்கு ஒருநாளும் சுகமே கிடையாது. "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்று பெரியோர் உரைத்த வாக்கியம் பொய்போகாது.

"குடியென்னுங் குன்ற விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்."

# வின்ட்ஸர் கோட்டையில் நாள்தோறும் சக்கரவர்த்தினியார் செய்துவருகின்ற சரிதைகள்.

முன்னே சக்கரவர்த்தினியாரவர்களும் அவர்களுடைய கணவனான பிரின்ஸ் ஆல்பர்ட்டு துரையவர்களும் நாள்தோறும் பின்மாலையிலேயே எழுந்து சாதாரணமாய் அவசியமான வியாபாரங்களாவது செய்துவருவார்கள்; அல்லது எட்டுமணிக்கு வெளியேயாவது சவாரிபோய் வருவார்கள். இப்பொழுதோ மகாராணியார் ஒன்பதுமணிக்குமுன்னே வெளிப்புறப்படுவதில்லை. மழை காற்று பனியொன்றுமில்லாத சவுக்கியமான காலங்களில் காலையிலே திறந்தவண்டியிலேறி பிராக்மோர் என்னும் இடத்திற்குச் சென்று அங்கே தாபம் அதிகமாயில்லாத காலங்களில் மாளிகைக்குள்ளே காலைப்போசனம்செய்வார்; தாபமாயிருக்கிற தினங்களில் தோட்டத்துநடுவில் அடித்திருக்கின்ற கூடாரத்தில் காலைப்போசனம்செய்வார். பிறகு தமக்குச் சொந்தமாய் வந்திருக்கும் கடிதங்களையும் சமாசாரபத்திரிகைகளையும் படிப்பார். எப்பொழுதும் மகாராணியாரோடு கூடவே இருக்கின்ற பெருமாட்டி பார்த்துப் படியாத சமாசாரப்பத்திரிகைகளை மகாராணியார் எடுத்துப் படிப்பதில்லையென்றும், அந்தச் சீமாட்டி முதலிலே படித்துப் பார்த்து மகாராணியார்க்கு ருசிக்கத்தக்கவையென்று தோற்றுமவைகளையெல்லாம் குறிப்பிட்டு வைப்பாளென்றும், அப்படிக் குறிப்பிட்டவைகளையன்றி மற்றவைகளை மகாராணியார் படிப்பதில்லையென்றும் சொல்லுகிறார்கள்.

பின்பு மகாராணியார் அவ்விடம்விட்டு மற்றொரு அறைக்குள்ளாவது கூடாரத்துக்குள்ளாவது சென்று அன்றையதினத்து

ராஜகாரியங்களைப் பார்த்துவருவார். அங்கே எந்நாளும் இருப துக்குக் குறையாமல் கடிதப்பெட்டிகள் வைத்திருக்கும்; ஒவ்வொரு தினங்களில் முப்பது பெட்டிகளுக்கு அதிகமும் இருப்பதுண்டு. அவை அனைத்தும் மகாராணியார் பார்க்கவேண்டியவையே. அங்கே ஒரு ஏவற்காரன் காத்திருந்து பிராக்மோரிலிருக்கும் மகாராணியா ரிடத்திற்கும் விண்ட்ஸர் கோட்டையிலுள்ள ஸர் ஹென்ரி பான் சன்பியினிடத்திற்கும் ஓயாமல் குதிரைமேல் போக்குவரவு செய்து கொண்டேயிருப்பான். மகாராணியார் பார்க்கவேண்டிய பெட்டி களில் ராஜாங்கத்துக் கடிதங்களும், வெளித்தேசத்து ராஜாக்களிடத் தினின்றும் மந்திரிகளிடத்தினின்றும் அநேகம் கடிதங்களும் வந்தி ருக்கும்; இவைமாத்திரமேயாயின் அத்தனை வருத்தமிராது; அற்ப மான கடிதங்கள் அநேகம் வந்திருக்கும். அவைகளையும் உபே க்ஷைசெய்யாமல் ஒவ்வொன்றையும் நுட்பமாய்ப்பார்த்துத் தீர்மா னிப்பதே மகாராணியாருடைய வழக்கம். இவ்வேலைகளை அவ்வி டத்தில் ஓயாமல் மூன்றுமணிகாலம் செய்துவிட்டு அவற்றையெல் லாம் வண்டியிலெடுத்துக்கொண்டு திரும்பி விண்ட்ஸருக்குப் போவார். அவ்விடத்தில் அந்தக் கடிதங்களையெல்லாம் ஸர் ஹென்ரி பான்சன்பி மகாராணியாருடைய தீர்மானப்படியே பார்த்து உத்தா மனுப்பிவிடுவார்.

அதற்குப்பிறகு மகாராணியார் தம்மக்களோடு அவ்விடத் திலேயே ஏதாவது இனிய பண்டங்களைப் புசித்துவிட்டு அப்புறம் தோட்டத்திலே சற்றுநேரம் உல்லாசமாய் உலாவிவிட்டுப் பிறகு விசேஷமொன்றும் இல்லாவிடின் சவாரிபோய்விடுவார்கள். சவாரி போய்த் திரும்பிவந்து சற்று இளைப்பாறுவார்கள். யாராவது மகாராணியாரைக் காணவேண்டுமென்றால் அதற்கு இதுதான் தருணம். காலைவேளையில் செய்துவரும் இந்த வியாபாரங்கள் ஒரு நாளும் மாறுபடாமல் என்றும் ஒரேரீதியாகவே இருக்கின்றன. எல்லாக் காரியங்களையும் மகாராணியார் மனப்பூர்வமாய்த் தாமே செய்துவருகிறார்; தமது கண்ணினால் தாமே பார்த்துவருகிறார். அவர் தாமே பார்த்துத் தீர்மானிக்கவேண்டிய பலவிதமான கடிதங்கள் எத்தனையெத்தனை அவரிடத்திற்கு வருகின்றன! நம்முடைய சங்கதி யை மகாராணியார் பார்க்கும்படிமாத்திரம் நேரிடுமானால் நமக்கு நியாயங்கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லையென்று மகாராணி யாரிடத்தில் வேலைசெய்பவர் நன்றாய்க் கண்டறிந்திருக்கிறார்கள். மற்றவிடங்களில் செய்வதைப்பார்க்கிலும் விண்ட்ஸர் கோட்டையி லேயே மகாராணியார் அதிக கருத்தாய்க் காரியங்களைப் பார்த்து வருகிறார்.

# அன்புடைமை.

இவ்வுலகத்தில் சிறியோராயினும் பெரியோராயினும் மனிதர்கள் கைக்கொண்டு ஒழுகவேண்டிய உத்தமமான நற்குணங்கள் பலவுண்டென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. அக்குணங்களில் அன்புடைமையென்பது ஒன்று; அது சிறுபருவத்திலேயே அமையவேண்டிய குணமாதலால் முக்கியமாய்ச் சிறுவர்களைப்பற்றியே இங்கு சிறிது எடுத்துக்கூறுவோம்.

பிள்ளைகளே அன்புடைமை இத்தன்மையதென நீங்களே ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கலாம். தாய் தந்தையர், செவிலித்தாயர், உபாத்தியாயர் ஆகிய பலபேர்கள் உங்களிடத்தில் அன்புபாராட்டிவந்தனர். அது உங்களுடைய நினைவிலிருப்பது அருமையான காரியமன்று. யாரிடத்தில் நீங்கள் அன்புபாராட்டிவரவேண்டுமோ அவர்களைப்பற்றி விசாரிப்பதே சிறிது கடினமாயிருக்கும். "ஓ! வயதுமுதிர்ந்தவர்கள் அன்புடையவர்களாயிருக்கலாம்; சிறுவர்களால் ஆகாது" என்று உங்களில் சிலர் சொல்லிக்கொள்வதுபோல் தோன்றுகிறது; அது மிகப் பிசகானது. நீங்கள் ஒருவர்க்கொருவர் அன்பாயிருப்பது கூடுமானகாரியமே. மனம்வைத்தால் பெரியோர்களிடத்திலும் நீங்கள் பிரீதியுடையவர்களாயிருக்கக்கூடும்.

ஒருவர்க்கொருவர் அன்புபாராட்டுவதைப்பற்றி முதலில் பேசுவோம். நீங்கள் வேண்டுகின்ற புஸ்தகமாவது விளையாட்டுக் கருவியாவது மற்றொருவனுக்கு விநோதமுண்டாக்குவதாயிருக்குமாயின், அதை அவனுக்குக் கொடுத்துவிடுவது கூடாதகாரிமோ? உங்களைவிடச் சிறுகுழந்தைகளை அழாமல் விளையாட்டுக் காட்டும்பொருட்டு உங்கள் விளையாட்டுக்களை விட்டுவிடுவது கூடாதகாரியமோ? உங்கள் சகோதரர்களாவது சகோதரிகளாவது நோயினாலும் வேறுவகை வருத்தத்தாலும் வேதனைப்படுகையிலும், கோபித்து மனங்கலங்கி நிற்கையிலும் அவர்களுக்கு இன்சொற் சொல்லிப் பிரீதியாய் இஷ்டமானதைச் செய்து அவர்களைச் சமாதானப்படுத்துவது கூடாதகாரியமோ? கோபங்கொள்வது மிகக் கெட்டகுணமென்பது யாவர்க்கும் தெரிந்ததுதான். தலைநோய் பல்நோய் இவற்றோடு பட்டாலும் படலாம்; கோபத்தின் கொடுமையோடுபட முடியாது. ஆயினும் நாம் மனங்கசந்திருக்கும்போது யாராவது முகம் கோணிப்பார்த்தாலும், முகம் கடுத்துப்பேசினாலும், பின்னும் அதிகமான வேதனை உண்டாகின்றதல்லவா? அப்படிப்பட்ட வேளைகளில் அன்பாய் ஒரு வார்த்தைசொன்னால் எவ்வகையான மனவேக்காடுகளும் போய் நமக்குத் தெரியாமலே சுளித்தமுகம் சிரித்தமுகமாகின்றது. எதற்கும் அடங்காத மூர்க்ககுணமும் சுளித்தமுகமும் உள்ளவனை வழிக்குக் கொண்டுவரச் சிறிது நல்வார்த்தையே போதும். வேண்டுமென்றால் இதை நீங்களே பரீக்ஷைபண்ணிப்பார்க்கலாம். உங்களில் உடன்பிறப்பு உள்ளவர்களெல்லாருக்கும் அவர்கள் எவ்விதங்களில் உதவியை விரும்புகிறார்களோ அது நன்றாய்த் தெரிந்திருக்குமே. தங்கள் சிறு கப்பல்களுக்குப் பாய்தைத்துக்கொடுக்கவும், காற்றாடிகளுக்கு வால்கட்டிக்கொடுக்கவும், அறுந்தவிரலுக்குத் துணிசுற்றவும் வேண்டுமென அவர்கள் அடிக்கடி வருகிறார்களல்லவா? இவைகளையெல்லாம் இஷ்டத்துடன் செய்வதாகவே பாவித்து முகங்குளிர்ந்து செய்துகொடுப்பது சுலபமானதுதானே. பிள்ளைகளே, இவை நீங்கள் ஒருவர்க்கொருவர் அன்

புடையவர்களாயிருப்பதற்குவேண்டிய வழிகளுள் சிலவாம். இன்னும் இப்படியே பலவுள. அவற்றை நீங்களே யோசித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

இனிப் பெரியோர்களிடத்தில் எப்படி அன்புபாராட்டலாமென்பதைப் பற்றிச் சொல்லுவோம். பெரியோர்களிடத்தில் பிரீதியுடையவர்களாயிருப்பது சிறுவர்களுக்கு அசாத்தியமோ? நீங்களே நினைத்துப்பாருங்கள். முன் ஒருகாலத்தில் ஒரு கிழவன் பள்ளிக்கூடம் வைத்திருந்தான். அவன் மிகவும் தள்ளாதவனாய் வாதரோகத்தினால் வருத்தப்பட்டுத் தன் சொந்தவேலைகளுக்குப் போய்வரச் சக்தியற்றவனாயினான். அப்பொழுது அவன் மாணாக்கர்களில் சிலர் அவனுக்காகக் கடைக்குப் போய்வருவதும், வைத்தியன் வீட்டுக்குப்போய் மருந்துவாங்கிவருவதும் வழக்கமாயிருந்தன. ஆனால் ஒரு பையனும் சும்மா அப்படிப்பட்ட வேலைகளுக்குப் போக உடன்படவில்லை; அவன் காசுகொடுத்து அவர்களை அவ்வேலைகளுக்குப் போகச் செய்தான். இதோ பார்த்தீர்களா? அப்பிள்ளைகளுக்கு இரண்டொருகாசு கிடைத்தது மெய்தான்; ஆயினும் அதைவிடப் பதின்மடங்கு பெருமையுள்ளதாய்த் தங்களுக்கு வாய்த்த நன்மைசெய்யும் தருணத்தை அவர்கள் இழந்துபோயினர். இப்படிப்பட்ட சமயங்களைக் கைசோரவிடாமல் ஜாக்கிரதையாயிருங்கள். தள்ளாதவர்களுக்காயினும் நோயாளிகளுக்காயினும் வேண்டுமான உதவிசெய்வதும், தாய் தந்தையர்களுக்கு வேண்டிய உபசாரம்செய்வதும், கோபித்துப் பிடிவாதம்செய்கின்ற சகோதரன் சகோதரிகளை இன்சொற்சொல்லிச் சமாதானப்படுத்துவதும் இவையெல்லாம் உங்கள் கடமையில் சேர்ந்தவையாம். இப்படிப்பட்ட நற்காரியங்கள் செய்யத் தருணம்வாய்த்தால் அதை ஒருபோதும் நழுவவிடலாகாது. இவை அன்புபாராட்டுகிற பலவகைகளுக்கு வழிகாட்டியேயன்றி வேறல்ல. நீங்கள் மனம்வைத்தால் அன்புபாராட்டத்தக்க விஷயங்கள் இவற்றைப்போல் ஆயிரமுண்டு. இப்பூமண்டலத்திலுள்ள ஒவ்வொருவனும் அன்புள்ளவனாயிருக்கமுயல்வனாயின், உலகத்தார் எவ்வளவோ சுகம்பெற்று வாழ்வார்கள்.

இதேவிஷயத்தைப்பற்றி நான் படித்த கதையொன்று இப்பொழுது எனக்கு நினைவுவருகின்றது. ஒருவன் அயர்ந்து தூங்கிக்சொண்டிருக்கையில் கனவிலே ஒரு பெரியவயலையும் அதில் அநேகர் வேலைசெய்துகொண்டிருக்கிறதையும் கண்டான். அவர்கள் செய்துவந்த வேலை மிகவும் அதிசயமாயிருந்தது. எப்படியென்றால், சிலர் அங்கே ராசியாய்க் குவித்திருந்த பெரிய கற்குவையோடு இன்னும் பல கற்களைக்கூட்டிப் பெரிதாக்கிக்கொண்டும், சிலர் அந்தப் பெரிய கற்குவையிலிருந்து கல்லுகளையெடுத்து வேறு சிறுராசியாகக் குவித்துக்கொண்டும் இருந்தார்கள். அது கண்டு அந்த மனிதன் அவ்வயல்தான் உலகமென்றும், அந்தப் பெரிய கல்மேடுதான் இவ்வுலகத்தில் மனிதர்க்குள்ள துன்பங்களென்றும், சிறிய குப்பலே சுகமென்றும் ஊகித்தான். ஆ! சுகம் எவ்வளவு சொற்பமாயிருந்தது! அந்தப் புலத்தில் ஒருவரும் சும்மா இராமல், அந்தக் குப்பல்களில் வேலைசெய்துகொண்டிருந்தார்கள். அப்படியே இந்தவுலகத்திலும் ஒவ்வொருவனும் சும்மா இராமல் துன்பத்தையாவது இன்பத்தையாவது அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறான். ஒவ்வொரு இனியவார்த்தையும் நற்காரியமும் துன்பத்தைக் குறைத்து இன்பக்குவியலை அதிகப்படுத்துகின்றன. நீங்கள் இவ்விரண்டினுள் எதில் வேலைசெய்வது உசிதமென்பதை இதனாலேயே எளிதில் தெரிந்துகொள்ளலாம்.